
# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



“உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்.” சங். 43:3

**“LIFT UP A STANDARD
FOR THE PEOPLE”
Isaiah 62 : 10**


**Translated from BS 893**
**Mar - April 2016**

பொருளடக்கம்

ஞாபகார்த்த சிந்தனைகள் ................ 2

தேவ பக்தியின் இரகசியம் ................ 8

**BS Tamil Version - 34**   **2016**



# ஞாபகார்த்த சிந்தனைகள்

*Memorial Thoughts*

**“பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் (சேமித்து வைக்கிறேன்)” (லூக். 23 : 46)**

*பஸ்கா வேளை நெருங்கி வருகிறது, கிறிஸ்தவர்களின் கவனம் விசேஷமாக அடையாளமான ஆட்டுக்குட்டியை அடிப்பதையே மையமாகக் கொண்டிருக்கிறது. அது பஸ்கா விருந்துக்கு முன்பு நடைபெற்றதும், தேவனுடைய ஆட்டுக்குட்டியாகிய இயேசு கிறிஸ்துவை அடையாளப்படுத்துவதுமாகவும் இருந்தது. இந்த பஸ்காவை நாம் ஆசரிப்பது மிகப்பெரிய நிறைவேறுதலுக்குத் தொடர்புடையது. இந்த சமயத்தில் கிறிஸ்தவர்கள் என்ற முறையில் நாம் சரித்திரங்கள் முழுவதிலும் மாபெரும் நிகழ்வாகிய, உலக இரட்சகரின் தியாக பலி மரணத்தை நினைவு கூர்ந்து ஞாபகார்த்தமாக கொண்டாடுகிறோம். இந்த வருடம் நம்முடைய இந்த ஆசரிப்பு மார்ச் 21, 2016 மாலையில், மிகச் சரியாக ஆறு மணிக்குப் பிற்பாடு ஆரம்பிக்கிறது, அதுவே நிசான்14-ன் தொடக்கமாக இருக்கிறது.*

*லூக்கா சுவிசேஷத்தில் உள்ள நமது தலைப்பு வாக்கியம் நமது எஜமானர் சிலுவையிலிருந்து சொன்ன கடைசி வார்த்தைகள் என்று நாம் அறிகிறோம். இந்த வாக்கியத்தில் ஒரு விசேஷமான வலிமை இருக்கிறது, அதை அநேகமாக ஒரே ஒரு குறிப்பிட்ட நோக்கு நிலையில் இருந்துதான் காண முடியும். நாங்கள் இதனை சாலொமோன் ராஜாவின் அறிவிப்பிலிருந்து, அதாவது மரணத்தில்,* **“மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகிறது”** *(பிர. 12 : 7) என்று கூறியதிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறோம். ஞானியின் வாக்கியம் மனுக்குலத்தாருக்குப் பொதுவான நிகழ்வாகிய மரணத்தைக் குறிப்பிடுகிறது. சரீரம் மற்றும் அதை ஆற்றல் உள்ளதாக்கும் ஜீவ சக்தி ஆகிய இரண்டுமே தேவனுடைய ஈவாக இருக்கின்றன - அல்லாமலும் அவை இரண்டுமே தண்டனையால் இழக்கப்பட்டிருக்கின்றன. மனுக்குலத்தார் அனைவரும் மரித்துக் கொண்டிருக்கிறார்கள். மரணமானது ஒரு வாரத்திலோ, ஒரு மாதத்திலோ அல்லது நூறு வயதிலோ நிகழ்வதாயினும், அது வெறுமனே ஜீவனின் ஓட்டத்தை, ஜீவனுடைய ஆவியை விட்டுவிடுவதாகும்.*

*மனுக்குலத்தாருக்கு ஜீவன் மீது பிறப்புரிமை இல்லை, ஏனெனில் இந்த உரிமையை நம்முடைய முதல் பெற்றோர் ஏதேனில் கீழ்ப்படியாமையினால் இழந்துவிட்டனர். தேவன், ஆதாமின் ஒவ்வொரு*




*பிள்ளையும், கூடுமான காலம் வரையில், தனது பெற்றோரிடமிருந்து சுதந்தரித்துக்கொண்ட உயிர்த்துடிப்பை பயன்படுத்தும்படி அனுமதிக்கிறார். ஆகையால் அவர்கள் தங்களால் முடிந்த காலம் வரைக்கும் தங்கள் ஜீவனைக் காத்துக் கொள்ள சரீரத்தைப்பேணுவது ஏற்றதாயிருக்கிறது. ஜீவனுக்கான சிலாக்கியம் மரணத்தின்போது தேவனிடத்திற்கு மறுபடியும் போகிறது. அது நமக்குரியதல்ல; அதனை நாம் நம்மிடமே தக்கவைத்துக் கொள்ள முடியாது. அது முழுவதும் தேவனுடைய பாதுகாப்பில் இருக்கிறது. அது ஒரு பொருளல்ல; அது ஒரு சிலாக்கியமாகும். ஒரு மனுஷன் இன்னொருவனிடம், “நான் இந்த நிலத்தை ஒரு வருடத்திற்கு பயிரிடுவதற்குரிய உரிமையை உனக்குக் கொடுப்பேன்,” என்று சொல்வதாக வைத்துக் கொண்டால், இதில், அந்த வருடம் முடிவடையும்போது அந்த நிலம் அதன் சொந்தக்காரருக்கு திரும்பச் சேர்ந்துவிடும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அப்படியேதான் ஜீவனுக்குரிய சிலாக்கியமும் இருக்கிறது. உண்மையில் எந்த மானிட ஜீவியும் ஜீவனுக்குரிய உரிமை தனக்கு இருப்பதாகச் சொல்ல முடியாது. முதல் மனிதனுடைய கீழ்ப்படியாமையினாலே ஏதேனில் அவனுக்கு சொந்தமான உரிமையின் ஒவ்வொரு அம்சமும் இழக்கப்பட்டுவிட்டது; அத்துடன் ஒவ்வொரு தனி நபரின் மரணத்தின்போது, ஜீவனின் ஆவியானது அதைத் தந்த தேவனிடத்திற்கு திரும்பப் போய் விடுகிறது.*

*ஆயினும், நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் காரியத்தில் இது வேறுவிதமாயிருந்தது. அவர்,* **“பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாக”** *இருந்தார். (எபி. 7 : 26). அவர் விரும்பியிருந்தால் அவர் ஜீவனை தக்கவைத்துக் கொண்டிருக்க*

**COURTESY BY :**

THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Leon Snyder. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** www.biblestandard.com

முடியும் என்ற போதிலும்கூட அவர் தம்முடைய ஜீவனை துன்மார்க்கரான மனிதர்கள் அவரிடமிருந்து எடுத்துக் கொள்ளும்படி அனுமதித்தார். அவரிடமிருந்து அதை எடுத்துக் கொள்ளும்படி அனுமதித்து அதை ஒப்புக்கொடுத்தார்; அதனால் தான் சிலுவையின் மீது அவர், **“உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்”** என்று சொன்னார். அது பாவத்தினிமித்தம் உரிமை இழக்கப்படாமல் இன்னமும் அவருடையதாகவே இருந்தது. அதனால் அவர் அதை பிதாவின் பராமரிப்புக்கு ஒப்புவித்தார்.

பிதாவின் பாதுகாப்பில் நம்பிக்கையுடன் ஒப்புவித்தது மரித்தோரிலிருந்து தம்மை எழுப்புவதைக் குறித்த தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மீது நமது கர்த்தருக்கு இருந்த விசுவாசத்தைக் குறிப்பாக உணர்த்தியது. நம்முடைய கர்த்தராகிய இயேசு இன்னும் மனித ஜீவனுக்கான உரிமையுள்ளவராகவே இருக்கிறார். மனித ஜீவியாக அவர் அந்த ஜீவனைக் கொடுத்திருந் தாலும்கூட, ஒரு மனிதனாக இருந்த நிலையில் அவர் தம்முடைய ஆவிக்கான உரிமையை அப்படியே வைத்திருந்தார். புது சிருஷ்டி மரிக்கவில்லை. ஒரு புது சிருஷ்டியாக அவர் நித்திரையிலிருந்தார்; ஆனால் ஒரு மனித ஜீவியாக அவர் மரித்தார். தேவனுடைய சித்தத்திற்கு மரணம் வரைக்கும் அவர் கீழ்ப்படிந்திருந்த காரணத்தினால், மூன்றாம் நாளில் ஒரு ஆவி ஜீவியாக அவர் எழுப்பப்பட்டார். மனித ஜீவனுக்கான இந்த உரிமையை அவர் முடிவில் தகப்பனாகிய ஆதாமுக்கும், தெய்வீக நிபந்தனைகளின்படி அதைப் பெற்றுக் கொள்ள விரும்புகிற மனுக்குலத்தார் அனைவருக்கும் கொடுப்பார்.

நம்முடைய கர்த்தர் மரிக்கும் வேளையில் **“உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்”** என்று கூறியதில் விசேஷமான அர்த்தம் இருப்பதாக நாம் காண்கிறோம். **“உம்முடைய கைகளில்”** எனும் சொற் றொடர், ஏதோ ஒன்றை பிதாவின் பொறுப்பில் நம்பிக் கையாக ஒப்படைக்கும் எண்ணத்தைத் தெரிவிப்பதாகத் தோன்றுகிறது; ஏனெனில் கை என்பது வல்லமையை உருவகமாக குறித்துக் காட்டுகிறது. கை மற்றும் புயம் இரண்டுமே வல்லமையை குறித்துக் காட்டுவதாயிருக்க, கை என்பது எப்போதுமே மிகவும் குறிப்பாக திறன், பொறுப்பு, தெய்வீக வல்லமை, மேற்பார்வை மற்றும், தனிக்கவனம் போன்ற கருத்தை தாங்கியிருக்கிறது. மரித்துக் கொண்டிருந்த நம்முடைய கர்த்தர் தமது ஜீவனையும், தம்முடைய உரிமைகள் எல்லாவற்றையும் பிதாவின் பொறுப்பில் ஒரு பாதுகாப்பான சேமிப்பாக, தேவனுடைய திட்டத்துக்கு இசைவாக ஏற்ற காலத்தில் மனுஷருடைய இரட்சிப்புக்காக அதை அவர் உபயோகிப்பதற்காக ஒப்படைத்துவிட்டார்.

நமது கர்த்தர், ஆதாமுக்காகவும், அவனுடைய சந்ததிக்காகவும் பரலோக பிரகாரங்களை விட்டுவிட்டு, மீட்கும் பொருள் வேலையை நிறைவேற்றும்படி வந்தார். ஆவி ஜீவி நிலையிலிருந்து மனுஷ ஜீவி நிலைக்கு அவருடைய இன மாற்றம், அவர் மனுக்




குலத்துக்கான மீட்கும் பொருள் கிரயமாகும் நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டது. ஒரு பூரண மனிதனுக் காக ஒரு பூரண மனிதன், கிரேக்க மொழியில், ஆண்டிலூட்ரன் (anti lutron) என்பது “சரி நிகரான ஒரு விலைக்கிரயம்” ஆகும். 1 கொரி. 15 : 20, 21-ல் சொல்லப் பட்டபடி, **“கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரை யடைந்தவர்களில் முதற்பலனானார். மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று.”** மேலும் 1 தீமோ. 2 : 5, 6 வாசிக்கவும்.

முப்பதாவது வயதில் இயேசு மனுக்குலமனைத் திற்கும் மீட்கும் பொருள் கிரயமாவதற்கு யோர்தானில் தம்மை ஒப்புக் கொடுத்தார். மேலும் தம்முடைய ஜீவனைக் கொடுப்பதன் மூலமாக அந்த விலைக் கிரயத்தை, அவர் தொடர்ந்து கொடுத்து வந்தார்; அது பிதாவின் ஏற்ற காலத்தில் ஆதாமுக்கும், அவனுடைய சந்ததியாருக்கும் சரிநிகரான விலைக்கிரயமாக கொடுக்கப்படும். தம்முடைய ஜீவனைக் கொடுக்கிற, அதனை சமர்ப்பிக்கிற, அதனை பலித்தியாகம் செய்கிற, அவரிடமிருந்து எடுத்துக் கொள்ள அனுமதிக்கிற இந்த வேலையானது அவர் **“எல்லாம் முடிந்தது!”** என்று சிலுவை-யில் மிகுந்த சத்தமாகச் சொன்னபோது முடிவுக்கு வந்தது.

கல்வாரியில் ஈடுபலியாக, ஆதாமுக்கு சரிநிகரான விலைக்கிரயமாக கொடுக்கப்பட்டதற்கு மேலாக ஒன்றுமே அவசியப்படவில்லை. ஆனால் ஆதாமின் கணக்கைத் தீர்க்க உடனடியாக அது உபயோகிக்கப்பட வில்லை; அப்படி அது செய்யப்பட்டிருக்குமானால், ஆதாமும், அவனுடைய சந்ததியாரெல்லாரும் அவ்வப்போது கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பரிமாற்றம் செய்யப்பட்டிருப்பார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய திட்டத்திற்கு இசைவாக பிற்காலத்தில் உபயோகப்படுத்துவதற்காக அந்த விலைக்கிரயம் தேவனுடைய நீதியின் கரங்களில் ஒரு சேமிப்பாக, நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் இருப்பு கணக்கில் வைக்கப்பட்டது. நம்முடைய கர்த்தர் ஈடுபலி கிரயத்தில் எதையும் பூமியில் இன்னமும் பயன்படுத்தவில்லை. அவருடைய சீஷர்கள் கூட பிதாவுடன் ஐக்கியத் திற்குள்ளாக கொண்டுவரப்படுவதற்கு முன்பாக, அவர் தேவனுக்கு முன்பாகப் பிரசன்னமாவதற்கு உன்னதத் திற்கு ஏறிப்போக வேண்டியதிருந்தது.

இந்த சமயத்தில், நாம் இயேசு கிறிஸ்துவின் சீஷனாயிருப்பதற்கு அத்தியாவசியமான ஆழ்ந்த கருத்துக்களைக் சிந்திப்போமாக! **“அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்”** என்று கூறினார். *(மத். 16 : 24)*. இந்த பாடமும்கூட ஞாபகார்த்த வேளைக்கு பொருத்தமான சிந்தனைக்குரிய சத்தான ஆகாரத்தை நமக்குத் தருகிறது. எல்லாவற்றையும் விட்டுவிட்டு, அவரைப் பின்பற்றும்படி நமது கர்த்தர் கொடுத்த அழைப்பு, இந்நாளில் அவருடைய நாமத்தில் கொடுக்கப்படுகிற வழக்கமான அழைப்புகளிலிருந்து மிகவும் வித்தியாசமான மொழி நடையில் கொடுக்கப் படுகிறது அந்த சிந்தனை, அந்த உணர்வு முற்றிலும் வித்தியாசமானது. கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் மத்தியில், இந்நாளில் “இயேசுவிடம் வாருங்கள்” என்ற அழைப்புடன் தொடர்புடைய பொதுவான கருத்து: “இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக் கொள்வதன் மூலம் நித்திய வேதனைக்கு தப்பித்துக் கொள்ளும்படி, நாங்கள் உங்களை அழைக்கிறோம். உங்களை வற்புறுத்திக் கேட்கிறோம். நித்திய மகிழ்ச்சியா அல்லது நித்திய வேதனையா என்பதே கேள்வியாயிருக்கிறது, ஆகவே அவரை இரட்சகராக ஏற்றுக் கொள்வதைத் தவிர நடை முறைப்படி உங்களிடம் தேர்வு செய்ய மற்றொன்று இல்லை,” என்று அறிவிக்கப்படுகிறது.

இந்த காரியத்தைப் பற்றி நமது பாடத்தில் நம்முடைய கர்த்தர் குறிப்பிட்டது எவ்வளவு வித்தியாச மாயிருக்கிறது. தேர்ந்தெடுக்க எதுவும் இல்லை என்றோ அல்லது தம்மைப் பின்பற்றுகிறவர்களாவதை தேர்வு செய்யாதவர்களுக்கு நித்திய வேதனை என்பது பற்றியோ ஒன்றுமே சொல்லவில்லை. அவருடைய வார்த்தைகள் சுட்டிக்காட்டியதின்படி, இது தனிப்பட்டவர்களின் தேர்ந்தெடுப்பைப் பற்றிய காரியம், வார்த்தையின் எந்த கருத்திலும் வற்புறுத்துகிற காரியமல்ல. இயேசுவின் அழைப்பில் வற்புறுத்தல் இல்லை; கெஞ்சி வேண்டுதல் இல்லை வேறு வழியே இல்லை என்ற எந்த நிர்ப் பந்தமும் இல்லை. அதற்கு மாறாக இது இயேசுவைப் பின்பற்றுகிறவர்களாகிறவர்களால் எதிர்த்துப் போராடப்பட வேண்டிய தடைகளை மனதின் முன்பு வைக்கின்றது. அவர்கள் சுயவெறுப்புகளையும், சிலுவைகளையும் எதிர்பார்க்க வேண்டும்; அவர்கள் அடியெடுத்து வைப்பதற்கு முன்பு அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நன்றாக கவனிக்கும்படி அவர்களை அழைக்கிறது. இந்த அழைப்பு அர்த்தமற்ற ஆரவாரமான உளறல்களாகவோ அல்லது மாய்மாலமான பேச்சாகவோ இருக்கவில்லை, ஆனால் வசனத்தின் ஒவ்வொரு கருத்திலும், நம்பத்தக்கதாகவும், பொருத்தமாகவும் இருக்கிறது, அத்துடன் சாத்தியமுள்ள எந்த தவறான புரிந்து கொள்ளுதலையும் தவிர்க்கத்தக்கதாகவும் சொல்லப்பட்டது.

இந்த வகையில் இது நம்முடைய கர்த்தர் இந்த காரியத்தைப் பற்றி சொன்ன மற்றவைகளுக்கும்




அப்பொழுது இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். (மத்.16 : 24).

ஒத்திருக்கிறது, உதாரணமாக, ஒரு கோபுரத்தைக்கட்ட மனதாயிருந்து, அஸ்திபாரம் போட்டபின் அந்த கட்டடத்தை முடிக்கத் திராணியில்லாமற் போன ஒரு மனிதனைப் பற்றிய உவமையைக் கூறினார். தம்மைப் பின்பற்றுகிறவர்கள் சீஷத்துவத்தின் விலையை எண்ணிப்பார்க்க வேண்டும் என்பதை அறிந்து கொள்வ தற்காக இயேசு இந்த உவமையைப் பயன்படுத்தினார். அதே அமைதியான ஒழுங்கு முறைப்படி கணக்குப் பார்த்து ஒரு கட்டிடத்தை கட்டி எழுப்ப ஆகும் செலவை எண்ணிப் பார்ப்பதுபோல, அவர்கள் முடிவை அடைந்து கொள்ள அவசியமான நிபந்தனைகளை நிறைவேற்ற தொடர்ந்து செல்ல போதுமான வாஞ்சையும் சகிப்புத் தன்மையையும், மற்ற அத்தியாவசியமானவற்றையும் உடையவர்களாயிருப்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும். அவருடைய வார்த்தைகள், **“தன் சிலுவையைச் சுமந்து கொண்டு எனக்குப் பின் செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்”** என்று சொல்கிறது. அவன் கர்த்தரை தனது தகப்பன், தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர், சகோதரிகள் எல்லாரைக்காட்டிலும் அதிகமாக நேசிப்பான் - ஆம், தன்னுடைய ஜீவனைக் காட்டிலும் அதிகமாக நேசிப்பான்; அல்லாவிடில் அவன் தன்னுடைய சீஷனாயிருக்கமாட்டான் என்பதை உணர்த்துவதாக அவர் மேலும் விளக்கி காட்டுகிறார். *(லூக். 14 : 26-30)*.

சீஷத்துவத்துக்கு அத்தியாவசியமானவைகளை ஆராய்கிற இவைகளை நமது கர்த்தர் எந்த வகுப்பைச் சேர்ந்த ஜனங்களுக்குக் கூறுகிறார் என்பதை நாம் ஜாக்கிரதையாக கவனிக்க வேண்டும். இழிவான பாவிகளுக்கும், தேவனுடைய உடன்படிக்கைகளுக்கும் ஆசீர்வாதங்களுக்கும், அந்நியர்களாகவும், பரதேசி -களாகவும், தூரமானவர்களாகவும் இருப்பவர்களுக்கு அவர் இதைக் கூறாமல் ஏற்கனவே அவைகளைப் பெற்றிருந்த இஸ்ரயேலர்களுக்கே கூறினார். வார்த்தையின் கருத்துப்படி ஏற்கனவே ஓரளவு நமது கர்த்தருடைய “சீஷர்களாயிருப்பவர்களுக்கு” - அவரி -டத்தில் விசுவாசமாயிருப்பவர்களுக்கும் மற்றும் ஏற்கனவே ஓரளவு அவருடன் ஒத்துழைத்துக் கொண்டிருப்பவர்களுக்கும் மட்டுமே கர்த்தருடைய

அழைப்பு கொடுக்கப்பட்டது மற்றும் தொடர்ந்து கொடுக்கப்படுகிறது என்பதை நமது பாடத்தின் கருத்தமைப்பு காட்டுகிறது. இந்த வார்த்தைகள் பாவிகளுக்குப் பொருந்தாது. ஆனால், தங்களுடைய பாவங்களின் மன்னிப்புக்கென்று கிறிஸ்துவுக்குள்ளாக தேவனுடைய கிருபையை, ஏற்றுக் கொண்டிருப் பவர்களுக்கே பொருந்தும் என்பதில் சந்தேகமில்லை.

"**கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல**" என்று மீண்டும் நம்முடைய கர்த்தர் அறிவிக்கிறார். (லூக் 9 : 62). இந்த விசேஷித்த வகுப்பார் தேவனுக்காகவும், நீதிக்காகவும் அன்பான வைராக்கியத்தை கவனத்துடன் மனதில் பதித்துக் கொண்டவர்களாகவும், தேவன் அவர்களுக்காக ஆயத்தம் பண்ணி வைத்திருக்கிற நன்மையான காரியங்களைப் பற்றி நியாயமான எண்ணங்களை பெற்றுக் கொண்டவர்களாகவும், ராஜ்யத்தின் சிலாக்கியங்களை போதிய அளவாவது உணர்ந்து போற்றுகிறவர்களாகவும் இருக்க வேண்டும். இல்லாவிடில் அவர்கள் "**விசுவாசத்தின் நல்லப் போராட்டத்தைப் போராட**"வும் முடிவு வரைப் போராடவும் கர்த்தருடைய ஒத்தாசை செய்யும் கிருபையால் உலகத்தின் ஆவியை மேற்கொள்ளவும் போதுமான அளவு சகிப்புத்தன்மையோ அல்லது போதுமான அளவு (பக்தி) வைராக்கியமோ உள்ளவர்களாக இருக்க முடியாது.


ஆண்டவராகிய இயேசு தம்முடையவர்களுக்கு சகாயம் (உதவி) செய்ய எப்போதும் விருப்பம் உள்ளவராக இருக்கிறார். நமது ஆண்டவர் பரலோகத்துக்கு ஏறிச்சென்ற பத்து நாட்களுக்குப் பிறகு அதாவது அவர் கட்டளையின்படி மேல் வீட்டறையில் கூடி இருந்த சீஷர்களின் மேல் பரிசுத்த ஆவி ஊற்றப்பட்டது. இந்த சிந்தனையை நமது கவனத்திற்கு கொண்டு வருகிறது. நம்முடைய ஆண்டவர் சிலுவையில் "**உம்முடைய கைகளில் என் ஆவியை** (அவருடைய ஜீவனையும், அதனுடன் சேர்ந்த ஜீவனுக்குரிய உரிமைகளையும்) **ஒப்புவிக்கிறேன்**" என்று உரத்த சத்தமாக கூறி பிதாவின் கைகளில் அவர் ஒப்படைத்த புண்ணியத்தின் மூலமாக சீஷர்கள் ஏற்றுக் கொள்ளப் பட்டதற்கு சாட்சியாக பரிசுத்தஆவி ஊற்றப்பட்டது.

நமது ஆண்டவருடைய புண்ணியம் அவருடைய சீஷர்களுக்கு சாட்டப்பட்டது. ஆனால் பூமிக்குரிய ஜீவனை பெற்றுக் கொள்வதற்காக அது அவர்களுக்கு சொந்தமாகக் கொடுக்கப்படவில்லை. ஏனெனில் உலக மக்களுக்காக புண்ணியமானது பயன்படுத்தப்பட வேண்டும். "**எல்லாரையும் மீட்கும் பொருளாக .... இதற்குரிய சாட்சி ஏற்றக் காலத்தில் விளங்கி வருகிறது.**" சுவிசேஷ யுக காலத்தில், நம்முடைய ஆண்டவரின் அடிச்சுவட்டை பின்பற்றிய அனைவரும், அவருடைய இரண்டாம் வருகையின்போது மனுக்குலத்திற்கான இழந்து போனதைத் திரும்பக் கொடுக்கும் ஆசீர்வாதத்தில், அவர்களுடைய பங்கை, அவர்களுடைய பிரதிஷ்டையின் போது துறந்துவிட்டார்கள். ஏனெனில், அதை விட பெரிய ஆசீர்வாதங்களான, மகிமை, கனம், சாவாமை - தெய்வீக சுபாவத்தில் அவர்களுடைய மீட்பருடன் ஒரு பங்கை பெற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையினால் அதைத் துறந்து விட்டார்கள்.

சபை வகுப்பார் அனைவரும் தங்களுடைய ஆண்டவருடன் மகிமைப்படுத்தப்படும்போது, நமது மீட்பருக்கு, தமது மரணத்தின் புண்ணியத்தை (கல்வாரியில் பிதாவின் கைகளில் சேமிப்பாக ஒப்புவித்ததை) தேவ நீதியினிடத்தில் மாற்றுவதற்கு ஏற்ற காலமாய் இருக்கும். இந்த சுவிசேஷ யுக முடிவில், இந்த மீட்கும் பொருள் பலி கிரயமானது நீதியினிடத்தில் முறையாக ஒப்படைக்கப்பட்டு இருக்கும் போது, பின்பு ஒருக்காலும் அது நமது ஆண்டவரின் அதிகாரத்திற்குட் பட்ட சேமிப்பாக இருக்காது. ஆனால் ஆதாமுக்காகவும் அவனுடைய சந்ததிக்காகவும் அதாவது உலக மனுக்-குலத்திற்காக அது பரிமாற்றமாக இருக்கும். இதனால் ஆயிரவருட ராஜ்யத்தின் வேலை தொடங்கும்படியாக அவர்கள் அனைவரும் பிதாவினால் குமாரனிடத்தில் உடனடியாக மாற்றப்படுவார்கள். கீழ்ப்படியாமை யினால் ஏதேனில் இழந்த பூமிக்குரிய ஜீவன் மற்றும் பூமிக்குரிய ஜீவாதார உரிமைகள் மற்றும் அதன் மேன்மைகள் ஆகியவற்றை மீண்டும் ஆதாமுக்கும் அவன் சந்ததிக்கும் கொண்டு வருவதற்காகவே மீட்கும்பொருள் கிரயம் திட்டமிடப்பட்டிருக்கிறது. ராஜ்ய வேலை தொடங்கும்போது, பூமியின் எல்லா ஜாதிகளும், பாவத்திலிருந்தும், மரண நிலைமை யிலிருந்தும் ஆதாமுக்குள் இழந்ததும் ஆனால் நம்முடைய ஆண்டவரின் மரணத்தினால் திரும்ப பெறப்பட்ட எல்லாவற்றுக்கும் அவரால் உயர்த்தப் படுவதற்காக மீட்பருக்கு கீழ்ப்படுத்தப்பட வேண்டும்.

நம்முடைய ஆண்டவருடைய சீஷர்களாக மாறுவதற்கு, நாம் "**மனுஷ குமாரனுடைய மாம்சத்தை புசிக்க**" வேண்டும் என்று நமது ஆண்டவர் கூறின போது அதனால் எதை அர்த்தப்படுத்தினார்? சொல்லப்பட்ட இந்த காரியம் நம்முடைய ஆண்டவரின் "மறைப் பொருள்"களில் (சங். 78 : 2) ஒன்றாகும். "**இவைகளை யெல்லாம் இயேசு ஜனங்களோடே உவமைகளாகப் பேசினார்: உவமைகளினாலேயன்றி, அவர்களோடே பேசவில்லை**" (மத். 13 : 34) "**இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்கு புசிக்க கொடுப்பான்**" என்று யூதர்கள் கேட்டனர். இந்த வார்த்தை களை அவர் பேசிய போது அவரைப் பின்பற்றியவர்-களில் அநேகர் அவருடனே கூட நடவாமல் பின்வாங்கிப் போனார்கள் என்று நாம் வாசிக்கிறோம். "**இது கடினமான உபதேசம் யார் இதைக் கேட்பார்கள்?**" என்று அவர்கள் சொன்னார்கள். (யோவா. 6 : 52-60). நம்முடைய ஆண்டவரின் இந்த வார்த்தைகளை இன்றும் அநேகர் உணரவில்லை. அவர்கள் இந்த வார்த்தைகளின் தனிச்சிறப்பான அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் உபயோகிக்கிறார்கள்.

ஆனால் மற்ற வேதவாக்கியங்களின் வெளிச்-சத்தை இந்த வார்த்தைகளின்மீது நாம் கொண்டுவரும்



என்னை நினைவுகூரும்படி இதை செய்யுங்கள். – 1 கொரி. 11 : 24, 25.

போது இந்த வார்த்தைகள் பெரும் வல்லமையும் முக்கியத்துவத்தையும் பெறுகின்றன. இயேசுவின் மாம்சம் அவருடைய மனுஷீக தன்மையைக் குறித்துக்காட்டுகிறது. முன்பு அவருடைய தன்மை பரலோகத்துக்குரியதாக இருந்தது. அவர் நமது நிமித்தம் அந்த ஆவி நிலைமையை துறந்து மாம்சமானார். ஏன் அவர் நமக்காக மாம்சமாக்கப்பட வேண்டும்? நல்லது, ஏனெனில் மாம்ச ஜீவியான ஆதாம், கீழ்ப்படியாமையாகிய ஒரே செயலின் மூலம் தன் மீது ஆக்கினைத் தீர்ப்பை வருவித்துக் கொண்டான். ஆதாமின் ஜீவன் நீதியின்படி இழக்கப்பட்டிருப்பதால், அவன் தன்னால் இழந்த ஒன்றை தன்னுடைய பிள்ளைகளுக்கு கொடுக்க முடியாதவனாக இருந்தான்; மரபு வழியாக அவன் பிள்ளைகளும் சன்மார்க்கம் மற்றும் சரீர ரீதியாகக் கெட்டுப்போனார்கள். எனவே உலகம் முழுவதும் மரித்துக் கொண்டிருக்கிறது.

ஆண்டவராகிய இயேசு தம்மை வானத்திலிருந்து இறங்கின அப்பமாகவும், ஒருவன் அதை புசித்தால் என்றென்றைக்கும் பிழைப்பான் என்றும் கூறுகிறார். **“நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம், இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான். நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்.”** (யோவா. 6 : 51) **“மனுஷகுமாரனுடைய மாம்சத்தை புசித்தல்”** என்றால் என்ன? நம்மை மரணத்தினின்று மீட்பதற்காக ஆண்டவராகிய இயேசு பாடநுபவித்து மரணம் அடைந்தார் என நாங்கள் பதிலளிக்கிறோம். அவருடைய ஜீவன் அவரிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்பட அவர் அனுமதித்தார். அவர் அதை தடுத்து நிறுத்தியிருக்க முடியும் என்றாலும், அவர் அதை செய்யவில்லை. இதுவே தெய்வீக ஒழுங்காக இருந்தது. அவர் பிதாவின் சித்தத்துக்கு கீழ்ப்படிந்திருந்தார். ஆதாமும் அவன் சந்ததி அனைத்தும் மரண ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து மீட்கப்பட்டு, தேவனுடன் இசைவிணக்கத்துக்குள் திரும்பி வந்து நித்திய ஜீவனை பெற்றுக் கொள்வதே இந்த ஒழுங்கின் நோக்கமாயிருந்தது.

உலகத்தின் மீட்கும் பொருள் கிரயமாக தன்னுடைய ஜீவனை இயேசு கொடுக்க வேண்டியது அவசியமாயிருந்தது. ஆனால் இந்த பலியினால் ஒருவன் பலனடைய வேண்டுமெனில், இதை அவன் மனப் பூர்வமாகவும் அறிவு பூர்வமாகவும் ஏற்றுக் கொள்வது அவசியமாக இருக்கிறது. அது இயற்கையான உணவை புசிப்பது போன்றதாகும். ஜீவனை காத்துப் பேணுவதற்காக நாம் புசிக்கிறோமே தவிர, நாம் யாரும் புசிப்பதற்காக நிர்பந்திக்கப்படுவது இல்லை. மனுக்குலமானது தாங்கள் மரணமடைந்துக் கொண்டிருப்பதை அறிந்துக்கொள்ளும்போது, “ஓ, நமது சரீர அமைப்பின் இழப்புகளை சரிசெய்து நம்மை உயிரோடிருக்கச் செய்து, இந்த பரிதாபமான நிலைமைகளில் இருந்து விடுவிப்பதற்கு போதுமான உணவு நமக்கு வேண்டும்” என்று சொல்லுகிறார்கள்.

இயேசுவானவர், தேவ ஆட்டுக்குட்டியாக அதாவது பஸ்கா ஆட்டுக்குட்டியாக மாற வேண்டும் என பரமபிதா நியமித்திருந்தார். மேலும் இந்த ஆட்டுக்குட்டியை புசிக்கும் அனைவரும் அதாவது அவருடைய பலியின் புண்ணியத்தை மதிக்கிறவர்கள் அனைவரும் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ளவும், ஆதாமின் கீழ்ப்படியாமை மற்றும் பாவத்தினால் இழந்த பூரணத்தை திரும்பப் பெறவும் இந்த ஆட்டுக்குட்டியை (பஸ்கா ஆட்டுக்குட்டியை) தேவன் நமக்கு அருளினார். இந்த ஜீவனை தற்கால ஜீவியத்தில் பெற்றுக் கொள்ள அவருடைய பிரதிஷ்டையாளர்கள் அழைக்கப் படுகிறார்கள். **“ஜீவ அப்பமாகிய”** அவரில் வைக்கும் விசுவாசத்தின் மூலம், தங்களுடைய இரட்சகரின் புண்ணியம் தற்காலிகமாக சாட்டப்படுவதின் மூலம் அதை அவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள். இந்த மாம்சத்தை, இந்த ஆட்டுக்குட்டியை வானத்திலிருந்து வந்த இந்த அப்பத்தை அவர்கள் இப்போது உயர்வாக மதிக்கிறார்கள். ஒவ்வொரு விசுவாசியும் தான் பாவத்தில் பிறந்திருக்கிறான் என்பதையும் ஆதாமுக்குள் தன்னுடைய ஆக்கினைத்தீர்ப்புக்காக கிறிஸ்து மரித்திருக்கிறார் என்பதையும் உணர்ந்து கொள்கிறான். விசுவாசமுள்ளவனாக அந்த பலியில் இயேசுவுக்குள்ளாக தேவன் நியமித்திருக்கிற தனது பங்கை ஏற்றுக் கொள்கிறான், தேவன் தனக்காக இந்த ஏற்பாட்டை செய்திருப்பதாக விசுவாசிக்கிறான்.

நம்முடைய ஆண்டவராகிய இயேசு தம்முடைய புண்ணியத்தை அவருடைய சீடர்களுக்கு அவர்களின் பூரண பிரதிஷ்டையின் உடன்படிக்கையின் நிபந்தனைகளின் கீழ் சாட்டுதல் செய்கிறார். ஆனாலும் தெய்வீக நீதியின் முழு அனுமதியுடனும் ஒத்துழைப்புடனும் இந்த சாட்டுதல் செய்யப்படுகிறது, மற்றபடியல்ல, இயேசுவின் சீடராக விரும்பும் அபூரணமான ஒருவனிடத்தில் இந்த புண்ணியத்தின் சாட்டுதலானது, **“தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்”** (ரோம. 8 : 33) என்று வாசிக்கிறபடி, தெய்வீக நீதியின் சம்பந்தமாகவும் பரம பிதாவின் சம்பந்தமாகவும் நீதியின் சாட்டுதலாக வெளிப்படுத்தப்படலாம்.

யாரெல்லாம் இந்த முதல் அடியை எடுத்து வைத்திருக்கிறார்களோ, அவர்களெல்லாரும் இரண்டாம் அடியான இரத்தத்தை பானம் பண்ண அழைக்கப் படுகிறர்கள். (யோவா. 6 : 53-56). அவர்களிடத்தில் தேவன் கூறினார், “நீங்கள் விசுவாசிக்கிறதினாலும்,

உங்களுடைய இருதயத்திலும் மனதிலும் இயேசுவின் மாம்சத்தை புசித்து இருக்கிறதினாலும், உங்களுடைய சித்தத்தை முழுமையாக தேவனிடத்தில் கொடுத்து, அபூரணமான மாம்சத்தையும் அதன் எல்லா காரியங்களையும் துறந்துவிட்டு, உங்களுடைய சிலுவையை எடுத்துக் கொண்டு இயேசுவை பின்பற்றி அவர் நடந்த வண்ணமாக நடப்பதே உங்களுக்கு தகுதியாயிருக்கிறது. இதுவே தேவனுக்குப் பிரியமானதாயும் இருக்கிறது. ஏனெனில் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை தொடர்ந்து வரும்படி நமக்கு ஒரு மாதிரியை அவர் பின்வைத்துப் போனார். *(1 பேது. 2 : 20-24).*

**“அவருடைய இரத்தத்தை பானம் பண்ணுதல்”** என்னும் இந்த இரண்டாம் அடியை எடுத்து வைப்பதற்காக ஏதேனும் சிறப்பான வெகுமதி அளிக்கப்படுகிறதா? பெற்றுக்கொள்ள சிறந்ததும், மேலானதுமான ஏதாவது இருக்கிறதா? என்று பேராவல் மிகுதியால் நாம் கேட்கலாம். ஆம், நீங்கள் உண்மையில் பிரதிஷ்டையில் மரித்திருப்பீர்களானால், இயேசு செய்தவிதமாக, உங்களுடைய ஜீவனை மரணமடைய செய்வீர்களானால், அவருக்குள் நீங்களும் பிழைத்து இருப்பீர்கள். உயிர்த்தெழுதலில், பொதுவான உலக மனுக்குலத்தை காட்டிலும் ஒரு உயர்வான ஸ்தானம் (உங்களுடைய அழைப்பின் காலத்தைப் பொறுத்து பரலோகத்திலோ அல்லது பூமியிலோ) உங்களுக்கு கொடுக்கப்படும். இவை அனைத்தையும் நாம் (1) “அவருடைய மாம்சத்தை புசிப்பதின் மூலமும் (2) அவருடைய இரத்தத்தை பானம் பண்ணுவதின் மூலமும் பெறுகிறோம். ஆண்டவரின் இந்த கிருபையான வாய்ப்புக்காக **“இயேசுவின் அடிச்சுவடுகளில் நடப்பதற்காக இந்த திட்டத்தை நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வேன்”** என்று பதிலளித்தோம். மனுக்குலம் உயிர்த்தெழச் செய்யப் படுவதற்கு முன்னான இக்காலத்திலும் இந்த வாய்ப்பு திறந்தபடியே இருக்கிறது.


தேவன் தமது குமாரனை மனிதனின் மீட்பராக அனுப்பினார். இயேசு மரித்தார், மீட்பின் கிரயம் கொடுக்கப்பட்டது. இந்த மீட்பில் தன்னுடைய பங்கை ஏற்றுக் கொள்ளும் உலகத்திலுள்ள எவனும் (புது உடன்படிக்கையானது முத்தரிக்கப்பட்டு தொடங்கப் படும்போது) மேலும் மேலும் உயிரடைந்து, முடிவில் நித்திய பூரண மனித ஜீவனை பெறுவதற்கேதுவான உண்மையான நீதிமானாகுதலை பெற்றுக் கொள்வான். ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுகிறபோது, இதைப் பற்றி கேள்விப்பட்டு இதை புரிந்து கொள்ளும் நல்ல இருதயம் உள்ள அனைவரும் இவ்வாறாக கூறுவார்கள். “இந்த பலியை தேவன் பாவிகளுக்காக கொடுத்து இருக்கிறபடியால், நான் என்னுடைய பங்கை பெறுவதில் பெரும் மகிழ்ச்சி கொள்வேன். மேலும் அதில் பங்கடைவதில் மகிழ்ச்சி அடைவேன். வானத்திலிருந்து வந்த அப்பத்தை புசிப்பதில் நான் மகிழ்ச்சி அடைவேன். தேவன் ஏற்படுத்தி இருக்கிற வாய்ப்புகளை எனக்காக பயன்படுத்துவதில் மகிழ்ச்சி அடைவேன். அவைகளால் நான் பயனடைந்து திரும்பக் கொடுத்தலை அடைவேன் அதாவது ஒரு பூரணமான உலகில் நித்திய ஜீவனுக்கான தகுதியுடைய பூரண மனித ஜீவியாக்கப்படுவேன்.”

> **பொய்களை அப்படியே நீங்கள் கேட்க விரும்பும்போது சத்தியத்தை ஏற்றுக்கொள்வது கடினமாகும்.**

பிறகு, இந்த அப்பத்தை புசிப்பதின் மூலமாக, உலகமனைத்தும் இழந்து போனதைத் திரும்பப் பெறுதலை அடையும், அதாவது பூரணமாக்கப்பட்ட பூமியில் பூரணமான ஜீவனை அடையும். உலகம் இந்த அப்பத்தை புசித்து அதன் விளைவாக இழந்து போனதைத் திரும்பப் பெறுதலை அடைய ஒரு ஆயிரம் வருடம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. இழந்து போனதைத் திரும்பப் பெறுதலின் முடிவில், மனுக்குலமானது அதன் சரீர அமைப்பிலும் அதன் குணநலன்களிலும் பூரணத்தை அடைந்து இருக்கும். மறுபக்கத்தில் சிலர் சரீரத்தில் மட்டுமே பூரணத்தை அடைந்து தங்கள் இருதயத்திலோ பாவம் நிறைந்தவர்களாக இருப்பார்கள். இவர்கள் ‘கொஞ்ச கால’ *(little season)* பரீட்சையில் கலகம் செய்து ஜீவனை முற்றிலும் இழந்து போவார்கள். இருப்பினும், மனுக்குலத்தின் எல்லா உறுப்பினருக்கும் நித்திய ஜீவனுக்கான ஒரு நியாயமான வாய்ப்பு வாக்களிக்கப் பட்டுள்ளது.

அப்பத்தை (மாம்சத்தை) புசிப்பது சம்பந்தமாக, ஒரே உண்மையான சபைக்கும் உலகத்துக்கும் உள்ள வேறுபாடு யாதெனில், உலகமானது (அப்பத்தை) புசித்து பூரண மானிட ஜீவனை உண்மையில் பெற்று கொள்கிறது. சபையோ விசுவாசத்தின் மூலம் அதைப் புசித்து அந்த ஜீவனை பெற்றுக் கொண்டதாக எண்ணப்படுகிறது. நாம் இந்த மானிட ஜீவனை இயேசுவுடன் (ஒப்புக் கொடுத்து) பலியிட்டு வைத்து, முடிவில் அவருடன் பெரிதான ஆசீர்வாதங்களையும் சிலாக்கியங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

ஞாபகார்த்தத்தில், அடையாளத்தில் பங்கு பெறுவதின் மூலம் *(1 கொரி. 11 : 26; மத். 26 : 26-28)* கிறிஸ்துவின் மரணத்தையும், அவருடைய பூரண மானிட நீதியையும், அதனோடு சேர்த்து ஜீவனுக்குரிய உரிமையையும் ஜீவாதார உரிமைகளையும் (ஒரே வார்த்தையில் சொன்னால் - நீதியை) விசுவாசத்தின் மூலம் உரித்தாக்கிக் கொள்வதை அடையாளப் படுத்துகிறோம். இது மனுஷீக பூரணத்தை தற்காலிக நீதிமானாக்கப்படுவதின் மூலம் நமக்கு அளித்திருக் கிறதாக எண்ணப்படும். கூடுதலாக, நாம் பிரதிஷ்டையின் சிலாக்கியத்தை பெற்றிருப்பதையும் *(மத். 16 : 24)* நமது ஆண்டவருடன் ஊழியர்களாக (உதவி ஆசாரியர்களின் பாவ நிவாரண பலியின் அங்கத்தினராக அல்ல) இந்த ஜீவியத்தின் விருப்பங்களையும், பேராவல்களையும் விட்டுவிட்டு பிரதிஷ்டை செய்திருக்கிற மற்ற விசுவாச வீட்டு அங்கத்தினருடனான நட்பையும் நாம் நினைவு கூருவோமாக.




பிரதிஷ்டை: தேவனைத் தொழுது கொள்ளும் நோக்கத்திற்காக பரிசுத்தமாக பிரித்தெடுத்து வைப்பதாகும்.

ஞாபகார்த்தத்தில் அடையாளப்படுத்தப்படுவதின் உண்மையை செயல்படுத்துவதில் குறிப்பாக நாம் மிகுந்த கவனமுள்ளவர்களாக இருக்கக்கடவோம். எனவே இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும் முன்பு நம்மை நாமே சோதித்தறிவோமாக. ஞாபகார்த்தத்தின் முன்னேற்பாடாக ஒரு பிரத்தியேக வகையான உதவியை பெறும்படி புது சிருஷ்டியின் பஸ்கா சம்பந்தப்பட்ட அத்தியாயத்தை (SITS 6, பக்கம் 457-484) கவனமாக நாம் அனைவரும் வாசிக்கக்கடவோம். நம்முடைய ஞாபகார்த்தத்தை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. ***

# தேவ பக்தியின் இரகசியம்

*The Mystery of Godliness*

**"நான் உன்னிடத்திற்குச் சீக்கிரமாய் வருவேனென்று நம்பியிருக்கிறேன். தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்: அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது. அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகாமேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார்."1 தீமோ. 3 : 14–16.**

Emphatic Diaglott - வேதாகம மொழிபெயர்ப்பில் இன்னும் வேறுவிதமாகக் கொடுக்கப்பட்டிருப்பதை வாசிக்கலாம். **"நான் உன்னிடத்திற்குச் சீக்கிரமாய் வருவேனென்று நம்பியிருக்கிறேன். தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்: அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது. அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக் கொள்ளுகிறபடியே மகாமேன்மையுள்ளது. அவர் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார்.**

தேவ பக்திக்குரிய இரகசியம் என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் பதமானது ஆங்கிலத்தில் KJV மொழிபெயர்ப்பில் "The Mystery of Godliness" "தேவ பக்தியின் மர்மம்" என்றும் Young literal மற்றும் Emphatic Diaglott மொழிப்பெயர்ப்புகளில் "Secret of piety" என்றும் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. தமிழில் சரியாக "தேவபக்திக்குரிய இரகசியம்" என்றே மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

Mystery என்கிற வார்த்தையானது Young மற்றும் Diaglott மொழிபெயர்ப்பில் உள்ளபடி "secret - இரகசியம்" என சரியாக மொழிபெயர்க்கப்பட வேண்டும். எவ்வாறாக இருப்பினும் அநேக வேதாகம மொழிபெயர்ப்புகளில் எழுதப்பட்டுள்ளபடி ஆங்கிலத்தில் Mystery என்ற வார்த்தையையே நாம் பயன்படுத்துவோம்.

இந்த வேத வாக்கியங்களை, கவனித்ததில் முதலாவது நாம் கேட்பது வசனம் 14-ல் குறிப்பிடப் பட்டுள்ள காரியங்கள் என்ன? இதற்குரிய பதிலானது அதின் முந்திய வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. சிலர் வேறு உபதேசங்களை போதித்து கட்டுக்கதைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது பற்றி பவுல் அப்போஸ்தலர் முதலாவது கூறுகிறார். (1 தீமோ. 1 : 3, 4). ஆதித் திருச்சபையில் இருந்த அநேகர், மோசேயின் நியாயப்பிரமாணத்தை கிறிஸ்தவ விசுவாசிகள் கட்டாயம் கைக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி வந்தனர். அது அவசியமில்லை என பவுல் காட்டினார்.

1 தீமோ. 2-ஆம் அதிகாரத்தில் எல்லா மனுஷருக்காகவும் ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் விண்ணப்பங்களையும், ஜெபங் களையும், வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும் என அப்போஸ்தலன் புத்திகூறுகிறார். இது, இப்பொழுதுள்ள இந்த பொல்லாத உலகத்தின் கலா. 1 : 4) ஆளுகை செய்பவர்கள் அனைவருக்காகவும் கிறிஸ்தவர்கள் ஜெபிக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்துகிறதா? (1 தீமோ. 2 ; 2) தமிழில் இரண்டாவது வசனத்தின் முதல் பகுதி விஷயத்தின் தாற்பரியத்தைத் தருகிறது. **"நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கும்"** கிறிஸ்துவின் காரியம் தடை படாதபடிக்கு, சிறப்பாக முன்னேறிச் செல்லவும், நாம் அவர்களுக்காக ஜெபிக்கிறோம்.

இரட்சிப்படைவதற்கான ஓர் முழுமையான முற்றிலுமான சந்தர்ப்பத்தை இதுவரை வாழ்ந்த

ஒவ்வொரு தனி நபரும் பெறுவான் என 1 தீமோ. 2 : 4-6 காட்டுகிறது. - "**எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட..... தேவன் சித்தமுள்ளவராக இருக்கிறார்.**" அவர்கள் அனைவரும் ஆதாமின் சாபத்திலிருந்து விடுவிக்கப்பட்டு அதன்பிறகு இரட்சிக்கப்படுவதற்கான அவர்களுக்குரிய ஓர் சந்தர்ப்பத்தை பெறுவார்கள். இந்த ஜீவியத்தில் அந்த சந்தர்ப்பத்தைப் பெறாதவர்கள் இழந்து போனதைத் திரும்பக் கொடுக்கப்படும் ஆசீர்வாதத்தின்கீழ் பெற்றுக் கொள்வார்கள்.

ஸ்திரீகள் அதாவது சபையிலுள்ள கிறிஸ்தவ ஸ்திரீகள், தகுதியான வஸ்திரத்தினாலும், தேவ பக்தியினாலும், நற்கிரியைகளினாலும் தங்களை அலங்கரிக்க வேண்டும் என்று வச. 9-12-ல் அப்போஸ்தலர் அறிவுறுத்துகிறார். "**உபதேசம் பண்ண.... ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை**" என்று அவர் கூறுகிறார். இது சபையிலுள்ள ஸ்திரீகள் எந்த உபதேசத்தையும் பண்ண முடியாது என்றா அர்த்தப்படுத்துகிறது? அப்படி இல்லை, இது சபை கூட்டங்களில் ஸ்திரீகள் போதனையாளராகவும், போதகராகவும் இருக்க கூடாது என்பதை மட்டுமே அர்த்தப்படுத்துகிறது. ஆனால் அவர்கள், தனிப்பட்ட முறையில், மற்றவர்களிடத்தில் உபதேசிக்கலாம். சபை கூட்டங்களில் மற்ற கிறிஸ்தவ ஸ்திரீகளுக்கு மற்றும் கிறிஸ்துவின் சீஷர்களல்லாதவர்களுக்கு போதனையாளராக இருக்கலாம். மேலும் சிறு பிள்ளைகளுக்கு போதிக்கலாம். அவர்கள் போதிக்கக் கூடிய விரிவான களம் அவர்களுக்கு இருக்கிறது. சபைக் கூட்டங்களில் போதிக்க மட்டுமே அவர்கள் அப்போஸ்தலரால் விலக்கப்பட்டுள்ளனர்.

அடுத்தது 1 தீமோ. 3 : 1-13-ல் பிஷப் அல்லது மூப்பர்களின் தகுதிகளை அப்போஸ்தலர் விவரிக்கிறார் உண்மையில் சபையின் உத்யோகத்தில் இவை இரண்டும் ஒரே உத்யோகமே ஆகும். மேலும் டீக்கன் (Deacon-உதவி மூப்பர்) மற்றும் பெண் டீக்கன்களின் (Deaconess-பெண் உதவி மூப்பர்கள்) தகுதிகளையும் அவர் விவரிக்கிறார். அப்போஸ்தலர், தீமோத்தேயு தேவையான புத்திமதிகளை பெற்றிருக்க வேண்டிய அவசியம் என்றும் அப்படிப்பட்ட காரியங்களை அவர் வச. 14, 15-ல் கூறியபோது தன் மனதில் கொண்டிருந்தார். "**நான் உன்னிடத்தில் சீக்கிரமாய் வருவேனென்று நம்பியிருக்கிறேன், தாமதிப்பேனாகில் தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்: அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய் சத்தியத்துக்கு தூணும் ஆதாரமுமாய் இருக்கிறது.**" முந்தைய சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுள்ள காரியங்கள், பல்வேறு காரியங்கள் சம்பந்தமாக கிறிஸ்தவ விசுவாசிகளை எப்படி அறிவுறுத்த வேண்டும் என்பதை அறிந்து கொள்ள தீமோத்தேயுவுக்கு உதவி புரியும்.

## "தேவனுடைய வீடே எக்லீஷியா ஆகும்"

1 தீமோ. 3 : 15-ல் "**தேவனுடைய வீடு**" என்று குறிப்பிடப்பட்டுள்ளது, கிறிஸ்தவர்கள் சந்திக்கும் கோபுரத்தைக் கொண்ட அல்லது கோபுரம் அல்லாத கட்டடம் அல்ல, ஆனால் இது உண்மையான சபையாகும் அதாவது எக்லீஷியா ஆகும். எக்லீஷியா எனும் கிரேக்க வார்த்தையின் அர்த்தம் "**அழைக்கப்பட்டவர்கள்**" என்பதாகும். உள்ளூர் பிரதேசம் தவிர, உள்ளூர் சபைகளிலும் (கூட்டங்களிலும்) பொதுவாகவும் கூட விசுவாசிகள் தங்களை எவ்விதம் நிர்வகிக்க வேண்டும் என்பதை அப்போஸ்தலர் அறிவுறுத்தினார்.




**1 தீமோ. 3 : 15-ல் "தேவனுடைய வீடு" என்று குறிப்பிடப்பட்டுள்ளது, கிறிஸ்தவர்கள் சந்திக்கும் கோபுரத்தைக் கொண்ட அல்லது கோபுரம் அல்லாத கட்டடம் அல்ல, ஆனால் இது உண்மையான சபையாகும் அதாவது எக்லீஷியா ஆகும். எக்லீஷியா எனும் கிரேக்க வார்த்தையின் அர்த்தம் "அழைக்கப்பட்டவர்கள்" என்பதாகும்.**

பூமிக்குரிய சபையின் பேர்பட்டியலில் எழுதப்பட தேவையில்லாமல், "**பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபை**" என்று எபி. 12 : 23-ல் நாம் வாசிக்கிறோம். 2 தீமோ. 2 : 19-ல் "**கர்த்தர் தம்முடையவைகளை அறிவார்**" என்று நாம் வாசிக்கிறோம். அவர் மட்டும் இருதயங்களை ஆராய்ந்து அறியக் கூடியவராய், சந்தேகமின்றி யார் உண்மையான கிறிஸ்தவ விசுவாசிகள் என்பதையும் யார் மாய்மாலக்காரர்கள் என்றும் அறிகிறார்! சுவிசேஷ யுகத்து உண்மையான விசுவாசிகள் "**ஜீவனுள்ள தேவனுடைய சபையை**" உருவாக்கி இருக்கிறார்கள். "**இப்படியிருக்க பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே நாம் அறிக்கை பண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்து பாருங்கள்.... தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார்..... மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார்: நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும், மேன்மைபாராட்டலையும் முடிவு பரியந்தம் உறுதியாய் பற்றிக்கொண்டிருப்போமாகில் நாமே அவருடைய வீடாயிருப்போம்**" எபி. 3 : 1, 5, 6; என்று அப்போஸ்தலராகிய பவுல் எழுதுகிறார். இதே மாபெரும் "**தேவனுடைய வீடானது**" தனிப்பட்ட விசுவாசிகளாகிய பாத்திரங்களைக் கொண்டிருக்கும் ஒரு பெரிய வீடாக 2 தீமோ. 2 : 20-ல் அப்போஸ்தலரால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இந்த வீட்டில் என்றென்றும் வாசம் பண்ண நாம் நாடுவோமாக!

## கிறிஸ்தவம் ஜீவனால் வியாபித்து இருக்கிறது

1 தீமோ. 3 : 15-ல் "**ஜீவனுள்ள தேவன்**" என்று குறிப்பிடப்பட்டுள்ளதை கவனிக்கவும். அவர் மரித்தவராகவோ, அல்லது விசாரமற்ற தேவனாகவோ இல்லை. கிறிஸ்தவம் மரணத்தின் மதமாக இல்லாமல் ஆனால் அது ஜீவனின் மதமாக இருக்கிறது.

நிச்சயமாகவே அது மரணத்தையும் மரித்த நிலைமையையும் பற்றி கூறினாலும் உயர்த்தெழுதலில் ஜீவனைப் பெற்றுக்கொள்ள அழுத்திக் கூறுகிறது. கிறிஸ்தவ மதமானது ஜீவனாலும் ஜீவனைக் கொண்டு வரும் விசுவாசத்தாலும் நிறைந்ததாகும்.

முஸ்லீம் மதமானது இஸ்லாம் என்று அழைக்கப்படுகிறது. முஸ்லீம்கள் புனிதமான ஞாபகச் சின்னங்களையும் (relics) புனித பயணங்களையும் மிகவும் முக்கியமானதாகக் கருதுகிறார்கள். மெக்காவுக்கு புனித பயணம் மேற்கொள்ளுதல் மிகவும் அற்புதமான இஸ்லாமிய அனுபவமாக கருதப்படுகிறது. ஒருமுறை ஒரு கிறிஸ்தவ மிஷனரியும் ஒரு முஸ்லீமும் தங்களுடைய நம்பிக்கைகளின் யோக்கியதைகளை பற்றி விவாதித்துக் கொண்டிருந்தபோது, அந்த முஸ்லீம் கூறினார். "எங்களுக்கு மெக்காவில் இந்த பெரிய கல்லறை உள்ளது. அதில் முகமது அடக்கம் செய்யப்பட்டுள்ளார்." எருசலேமில் நீங்கள் கொண்டிருப்பதோ ஒரு காலியான கல்லறை ஆகும்." அந்த கிறிஸ்தவர் "ஆம்" என்று பதிலளித்தார். "ஏனெனில் எங்களுடைய தலைவரும் இரட்சகராகிய கிறிஸ்து மரித்தவராய் இல்லை, ஆனால் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார்."

கிறிஸ்தவர்கள் ஜீவனுள்ள தேவனை மாத்திரம் கொண்டிருக்காமல் ஜீவனோடிருக்கும் கிறிஸ்துவையும் உடையவராய் இருக்கிறார்கள். அவர் **"இனி மரிப்பதில்லை"** அவர் **"தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக் கிறவர்."** **"நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்"** என்று அவர் கூறுகிறார். (ரோம. 6 : 9; எபி. 7 : 25; யோவா. 14 : 19; 1 கொரி. 15 : 12-23).

நாம் ஜீவனுள்ள வேதாகமத்தையும் உடையவர் களாய் இருக்கிறோம். **"தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும்"** (எபி. 4 : 12) யோவா. 6 : 63-ல் இயேசு கூறினார். **"நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது."** ஆம் அவைகள் ஜீவ வசனங்கள், அதை விசுவாசிப்பவர்களுக்கு நித்திய ஜீவனை கொண்டுவரக் கூடியதாயிருப்பதால் ஆச்சரியமான ஜீவ வசனங்கள்.

எசே. 47-ல் சிங்காசனத்தின் கீழிருந்து புறப்பட்டு ஓடுகிற ஜீவ தண்ணீரானது, அது எங்கெல்லாம் ஓடியதோ அங்கெல்லாம் ஜீவனைக் கொண்டு வந்தது என்று நாம் வாசிக்கிறோம். எல்லா மனுக்குலத்தின் மீதும் வர இருக்கும் திரும்பக் கொடுத்தலின் ஆசீர்வாதத்தை இவைகள் அடையாளப்படுத்துகிறது. மேலும் வெளி. 22 : 1, **"பின்பு, பளிங்கைப் போல் தெளிவான ஜீவத் தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தான்."**

1 பேது. 2 : 4, 5-வசனங்களில் சபையானது **"ஜீவனுள்ள கற்களாக"** ஆவிக்கேற்ற மாளிகையில் இயேசுவுடன் ஜீவனோடிருப்பதாக வாசிக்கிறோம். இது ஏனெனில் இயேசுவின் சீஷர்கள் தங்களுடைய ஜீவன் அடங்கி இருக்கும் **"ஜீவ அப்பமாகிய"** கிறிஸ்துவின் பிட்க்கப்பட்ட சரீரத்தை விசுவாசத்தின் மூலம் அடை யாளமாக புசிக்கிறார்கள் (யோவா. 6 : 51, 53). அவர்கள் அர்ப்பணிப்பில் அல்லது பிரதிஷ்டையில் தங்களை ஜீவ பலியாக தேவனுக்கு ஒப்புக் கொடுக்கிறார்கள், மேலும் தங்களுடைய நற்கிரியைகளினால் அவர்கள் கொண்டிருக்கும் ஜீவனுள்ள விசுவாசத்தை காண்பிக்கிறார்கள். **"அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன்: இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை"** (ரோம. 12 : 1). இவர்களுடைய நாமங்கள் "ஜீவ புஸ்தகத்தில்" எழுதப்பட்டு இருக்கிறது. (பிலி. 4 : 3). இவர்கள் தேவனுடைய ராஜ்யத்தின் நித்திய ஜீவனைப் பெறும் பாதையில் இருக்கிறார்கள். (1 யோவா. 2 : 25). ஆகவே வேதாகமத்திலும், கிறிஸ்தவத்திலும் இருப்பது ஜீவன்-ஜீவன்- அற்புதமான ஜீவ வசனங்கள்! நீங்கள் தேவனுடைய அற்புதமான வாய்ப்பை ஏற்றுக் கொண்டு இருக்கிறீர்களா? அப்படி இல்லையென்றால், இப்போதே அதை ஏன் செய்யக்கூடாது?

## "சத்தியத்துக்கு தூணும் ஆதாரமுமாயிருக்கிறது"

KJV வேதாகமத்தில் மற்ற அநேக மொழிப் பெயர்ப்புகளைப் போல, **"ஜீவனுள்ள தேவனுடைய சபையாய் சத்தியத்திற்கு தூணும் ஆதாரமாயிருக்கிறது"** என்று மொழிப்பெயர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் (இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் மேற்கோள் காட்டப்பட்ட) Young மற்றும் Diaglott மொழிப்பெயர்ப்புகள் சிறந்தவை என நாங்கள் நம்புகிறோம். ஏனெனில் இவைகளில் "தேவபக்திக்குரிய இரகசியமானது" என்பது "தேவபக்திக்குரிய பரம இரகசியம் (secret) என்றும் (நம்முடைய ஆண்டவராகிய இயேசுவினால் (மூலம்) மட்டுமே இதைச் சரியாக புரிந்துக்கொள்ள முடியும்) **"சத்தியத்தின் தூணும் அஸ்திபாரமுமாயிருக்கிறது"** எனவும் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. சத்தியத்தின் தூணும் அஸ்திபாரமும் சபையைவிட பெரியதும் மேன்மை யானதுமாயிருக்கிறது. இது வேறொன்றுமல்ல, சபையின் தலையான நம்முடைய ஆண்டவர் இயேசுவையே குறிக்கும்.

மத். 16 : 13-18-ஆகிய வசனங்களில் இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில் கேட்டார், **"நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்... சீமோன் பேதுரு பிரதியுத்திரமாக, .... நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். இயேசு அவனை நோக்கி, யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்: மாம்சமும், இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்.** (இந்த பெரிய சத்தியமானது, மானிட ஆதாரத்தில் இருந்துவராமல், ஆனால் தேவனிடத்தில் இருந்து வந்ததாகும்). **மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய்** (கிரேக்க

வார்த்தையில், பெத்ரோஸ் என்றால் பாறை என்று பொருள்படும்). **இந்தக் கல்லின் (**கிரேக்க வார்த்தையில், பெத்ரா என்றால் பாறை திரள் என்று பொருள்**) என் சபையை கட்டுவேன். பாதாளத்தின்** (Hades) **வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை."** பேதுருவே இந்தப் பாறை என்றும் இதன் மீதே இயேசு தம்முடைய சபையைக் கட்டினார் என்று அநேகர் கோருகிறார்கள். ஆனால் உண்மையில் இயேசு எதை அர்த்தப்படுத்துகிறாரென்றால், **"நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து"** என்று பேதுரு கூறிய அந்த பெரிய சத்தியத்தின் மீதே சபையானது கட்டப்பட்டது என்பதை அர்த்தப்படுத்துகிறார். இந்த பெத்ரா அதாவது "பாறைத்திரளே" சத்தியத்தின் தூணும் அஸ்திபாரமுமாய் இருக்கிறது. அநேகர் தவறாக சிந்திக்கிற மற்றும் போதிக்கிறபடி, சபையானது பேதுரு என்ற மனிதனின் மீது கட்டப்படுகிறதில்லை.

**"மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்: பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை"** (மத். 16 : 18) என்று சபை சம்பந்தமாக இயேசு கூறினார். சபையானது இந்த அற்புதமான சத்தியத்தை சபையாக, மேசியாவாக, இயேசுவின் மீது விசுவாசத்துடன் பிடித்துக் கொண்டிருக்கிறவரையில், அவர்கள் மரித்த நிலையில் நீடித்திருப்பதில்லை என்று நிச்சயித்திருக்க இயலும். ஆனால் அவர்களும்கூட மரித்தோரிலிருந்து எழுப்பப் படுவார்கள். அதாவது "பாதாளத்தின் வாசல்கள்" உண்மை யான சபைக்கு எதிராக மேற்கொள்வதில்லை. மேசியா மற்றும் கிறிஸ்துவாக, இயேசுவுக்கு பொருத்தமான இந்த அற்புதமான போதனைகளே **"சத்தியத்துக்கு தூணும் ஆதாரமுமாயிருக்கிறது."**

இந்த பெரிய சத்தியம் 1 கொரி. 3 : 11-13- வரையுள்ள வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது; **"போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல், வேறே அஸ்திபாரத்தைப்போட ஒருவனாலும் கூடாது. ஒருவன் அந்த அஸ்திபாரத்தின்மேல், பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால்.... அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும். நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும்: அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்."** ஆம், இயேசுவே பெரிய அஸ்திபாரம்.

மத். 7 : 24, 25-ல் இயேசு, **"ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக்கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை: ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது"** என்று கூறுகிறார். கிறிஸ்துவாகிய இயேசுவின் மீதான இந்த போதனையானது, சாத்தான் எவ்வித சோதனைகள் மற்றும் கஷ்டங்களைக் கொண்டு வந்தாலும், இந்த போதனைகளை விசுவாசித்து, கிறிஸ்துவின் போதனை




-களுக்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு பலமுள்ளதும்- அவர்களை நிலைநிறுத்தும் அஸ்திபாரமுமாயிருக் கிறது என்பதை இது சித்திரிக்கின்றது. ஆனால் மணல் மீது கட்டின புத்தியில்லாத மனுஷனைப் போன்றிருக்கிறவர்களுக்கு அது அப்படி அல்ல. (வச. 26, 27). அவர்களுடைய அடையாளமான வீடு அழியும்.

நியூயார்க்கில் இப்படிப்பட்ட உயரமான கட்டடங்கள் கட்டப்பட இயலுவதற்கான காரணம் என்னவெனில், அவைகளின் அஸ்திபாரம் திடமாக இருப்பதே ஆகும். அவைகளின் கீழ்நோக்கி பாறை இருக்கிறது. இந்த நியூயார்க் அஸ்திபாரங்கள், திடமான கன்மலையாகிய கிறிஸ்துவை போன்றது. நீதி. 9 : 1-ல், **"ஞானம் தன் வீட்டைக்கட்டி, தன் ஏழு தூண்களையும் சித்திரந்தீர்த்து"** என்று நாம் வாசிக்கிறோம். இந்த ஏழு தூண்களும் வேதாகமத்தின் ஏழு தாற்பரியங்கள் அல்லது போதனைகளை குறிப்பிடுவதாகத் தெரிகிறது; அவைகள்: கோட்பாடுகள், கற்பனைகள், வாக்குத்தத்தங்கள், புத்திமதிகள், சரித்திரங்கள் மற்றும் அடையாளங்கள் ஆகும். ஆண்டவருடைய ஜனங்களை நிலைநிறுத்தும் வேதாகமத்தின் உண்மையான சத்திய போதனைகள் இவைகளே. சில நேரங்களில் அப்போஸ்தலர்களான யாக்கோபு, பேதுரு மற்றும் யோவான் போன்ற மிகச் சிறப்பான தனிநபர் விசுவாசிகள் தூண்களாக குறிப்பிடப்படுகிறார்கள். ஆனால் அது இந்த வார்த்தையின் பொதுவான உபயோகம். மேலும் இது இயேசுவே சத்தியத்தின் தூணும் ஆதாரமுமாயிருக்கிறார் என்ற உண்மைக்கு இசைவற்றதாகவும் இல்லை. இந்த சத்தியமே உண்மையில் சபையை நிலைநிறுத்தும் சத்தியமாகும்.

சபையானது வேதாகமத்திற்கு முன்பு அது உண்டாக்கப்படுவதற்கு முன்பே இருக்கிறது என்ற காரணத்தினால், நாம் வேதாகமத்தைவிட சபையை விசுவாசிக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இவர்கள் குதிரை வண்டியை குதிரைக்கு முன்பதாக பிணைக்கிறார்கள்; ஏனெனில், இயல்பாகவே வேதாகமமானது சபைக்கு முன்னதாக இருந்தது, பெந்தேகோஸ்தே நாளில், சபையின் ஆரம்பத்தில் புதிய ஏற்பாடானது இன்னும் எழுத்து வடிவில் இல்லாமல் இருந்த நிலையிலும், சத்தியமானது பழைய ஏற்பாடு மற்றும் சுவிசேஷத்தில் கொடுக்கப்பட்டபடி சபை வருவதற்கு முன்னதாகவே இருந்தது.

# இயேசு யாவரும் ஒப்புக்கொள்கிறபடியே மகா மேன்மையானவர்

அடுத்து "**தேவ பக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்கிறபடியே** (முரண்பாடுகள் இல்லாமல்) **மகா மேன்மையுள்ளது**" என்று 1 தீமோ. 3 : 16 குறிப்பிடுகிறது. உண்மையில் இது யாரைக் குறிப்பிடுகிறதென்றால் இயேசுவையே ஆகும். அவரே இந்த "**தேவபக்திக்குரிய இரகசியம்**"! அவரும் அவர் தொடர்பான சத்தியங்களின் மீதே சபையானது நிறுவப்படுகிறது. (யோவா. 14 : 6). "**ஒப்புக்கொள்கிறபடி மகா மேன்மையுள்ளது**" என்பது இங்கே சிறப்பான மொழிப்பெயர்ப்பாக இருக்கிறது. இயேசு கிறிஸ்து உண்மையில் பெரியவர். ஏசா. 53 : 12-ல் மேசியா சம்பந்தமாக, யேகோவா தீர்க்கதரிசனமாக "**அநேகரை அவருக்கு பங்காகக் கொடுப்பேன்**" என்று கூறுகிறார். மேலும் "**அவர் பெரியவராயிருப்பார், உன்னத மானவருடைய குமாரன் என்னப்படுவார்**" என்று லூக். 1 : 32 இயேசுவைப் பற்றி தீர்க்கதரிசனமாக சொல்கிறது. இயேசு மகா பெரியவராயிருக்கிறார். நாம் ஒவ்வொருவரும் இந்தக் கேள்வியை நம்மில் கேட்போமாக. இயேசு உண்மையிலேயே எனக்கு மகா பெரியவராயிருக்கிறாரா? அவர் மகா மேன்மையுள்ளவர் என்று மற்றவர்களிடம் சொல்லுகிறேனா? காலம் செல்ல செல்ல என்னுடைய மதிப்பிடுதலில் அவர் மகா மேன்மையுள்ளவராய் மாறுகிறாரா?

# வேதாகம இரகசியங்கள் புரிந்து கொள்ள இயலாதவைகள் அல்ல

இந்த "தேவ பக்திக்குரிய இரகசியம்" என்பது வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணற்ற இரகசியங்களில் ஒன்று ஆகும். சிலர் இரகசியங்கள் புரிந்து கொள்ள இயலாத கருத்துக்கள் என்று எண்ணுகிறார்கள். அதாவது ஒருவராலும் புரிந்து கொள்ள இயலாத காரியங்கள் என்று எண்ணுகிறார்கள். வேதாகமத்தின் இரகசியங்கள் இயேசுவின் உண்மையான சீஷர்களால், அவைகள் அறிந்து கொள்ளும் ஏற்ற காலம் வரும்போது புரிந்து கொள்ளப்படுகிறது. (1 தீமோ. 2 : 6; மத். 11 : 25, 26; 13 : 11-23, 37-43; லூக். 8 : 4- 15). நாம் இப்போது தேவனுடைய பரிசுத்தவான்களாக இயேசுவே அந்த "தேவபக்திக்குரிய இரகசியம்" என்று புரிந்து கொள்கிறோம். வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற சில இரகசியங்களையும் நாம் கவனிக்கலாம். அவைகளும், அவைகள் அறிந்து கொள்ளப்படும் ஏற்றக் காலம் வந்து இருந்தபோது, புரிந்து கொள்ள இயலாதவைகளாக இல்லை என்பதை நாம் பார்ப்போம்.

"**ஆதி காலங்களுக்கும், தலைமுறை தலைமுறை களுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது அவருடைய பரிசுத்த வான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியம்.... கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்**" என்று கொலோ. 1 : 25, 27 குறிப்பிடுகிறது. இயேசுவும் மற்றும் அவருடைய உண்மையான சபை அங்கத்தினர்களுமே கிறிஸ்துவாகவும், தலை மற்றும் சரீரமாகவும், மாபெரும் தீர்க்கதரிசி மற்றும் விடுதலை யாளராக இருக்கிறார்கள் என தேவனுடைய ஜனங்கள் அறிந்து கொள்கிறார்கள். உபா. 18 : 15-ல் "**உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார். அவருக்குச் செவி கொடுப்பீர்களாக**" என்று கூறப்பட்டுள்ளது.

வேதாகமத்தின் ஏழு தரங்கள்

கோட்பாடுகள், கட்டளைகள், வாக்குத்தத்தங்கள், புத்திமதிகள், தீர்க்கதரிசனங்கள், வரலாறுகள், அடையாளங்கள்.

"**ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன்** (தன்னுடைய அடையாளமான எக்காளமாகிய, தன் பெரிய செய்தியாகிய) **எக்காளம் ஊதப் போகிறபோது தேவரகசியம்** (இயேசுவுடனான சபை) **நிறைவேறும் என்று**" சொல்லப்படுகிறது. (வெளி. 8 : 2; 10 : 6).

"**பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியத்தை அறிந்து கொள்ளுகிற உணர்வின் பூரண நிச்சயத்தினுடைய எல்லா ஐசுவரியத்**"தை சகோதரர்களுக்கு கொடுக்க தான் தீவிர விருப்பம் மற்றும் புரிதலை கொண்டிருப்பதாக கொலோ. 2 : 2, 3; 4 : 3,4-ல் அப்போஸ்தலனாகிய பவுல் காண்பிக்கிறார்.

ரோம. 11 : 25-27-ல் "**மேலும் சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு, ஒரு இரகசியத்தை நீங்கள் அறிய வேண்டுமென்றிருக்கிறேன்: அதென்னவெனில், புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும் வரைக்கும்** (கி.மு. 607 - கி.பி. 1914) **இஸ்ரயேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும்**" என்று வாசிக்கிறோம். சுவிசேஷ யுகத்தின் முடிவு வரைக்கும் இஸ்ரயேலர் ஆவிக்குரிய குருடராய் இருப்பார்கள் என்பதே இந்த இரகசியமாயிருந்தது; மேலும் தம்முடைய நாட்களில் அவர்களுடைய குருட்டாட்டமானது, மாறத் தொடங்கியிருப்பதையும் அவர்களுடைய சொந்த நாட்டில் திரும்ப கூட்டிச் சேர்க்கப்பட்டுக் கொண்டிருக்கிறதையும் நாம் பார்க்கிறோம். எனவே இந்த இரகசியமானது தேவ ஜனங்களால் புரிந்து கொள்ளப்படுகிறது.

# "அக்கிரமத்தின் இரகசியம்"

"அக்கிரமத்தின் இரகசியமும்" உண்டு; அது பெரிய அந்தி கிறிஸ்துவை குறிக்கிறது; "**அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது**" (2 தெச. 2 : 7). "அக்கிரமக்காரன்" வெளிப்பட்டு அவனைக் கர்த்தர் தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பண்ணப் போவதால் (வச. 8) தேவ ஜனங்கள் கஷ்டப்பட வேண்டியதில்லை, தேவ ஜனங்கள் இந்த இரகசியத்தையும் புரிந்து கொள்ளுகிறார்கள். வரலாற்றில் ஜனங்களை பெரிதும் ஒடுக்கிக்

கொண்டிருந்த மிகப் பெரிய ஸ்தாபன அமைப்பானது கிறிஸ்துவைப் போன்றே தலையையும் சரீரத்தையும் கொண்டிருக்கும் அது "**நடுவிலிருந்து நீக்கப்படும்**" வரைக்கும் 2 தெச. 2 : 7-ல் அதற்காக தீர்க்கதரிசனமாக கூறப்பட்ட பல்வேறு காரியங்களையும் செய்தது என்பதை தேவ ஜனங்கள் புரிந்து கொள்கிறார்கள்.

வெளி. 17 : 1-5-ல் சுவிசேஷ யுகத்து பெரிய விசுவாசத் துரோக சபையாகிய ஸ்திரீயானவள், தன்னுடைய நெற்றியில் "**இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய்**" என்ற வார்த்தைகள் எழுதப்பட்டவளாக மிருகத்தின் மீது ஏறிபோகிறதாக அடையாளப்படுத்தப்படுகிறாள். இந்த தாய் ஸ்தாபன அமைப்பின் போதனைகளிலும், ஆவியிலும் பங்கு கொண்ட குறைந்த விசுவாசத் துரோகச் சபைகள் குமாரத்திகள் ஆவர். ஆமோஸ் 3 : 7 கூறுகிறது, "**கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்.**" எனவே வேதாகமத்தின் இரகசியங்கள், ஏற்ற காலம் வரும்போது கிறிஸ்துவின் உண்மையான சீஷர்களால் புரிந்து கொள்ள இயலும் காரியங்களாகவே இருக்கின்றன.

"**பரலோக ராஜ்யத்தின் இரகசியங்களை அறியும்படிக்கு உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ** (புறம்பே இருக்கிறவர்களுக்கோ) **அருளப்படவில்லை**" என்று மத். 13 : 11 சொல்லுகிறது. மேலும் "**புறம்பே இருக்கிறவர்களுக்கோ இவைகளெல்லாம் உவமைகளாக சொல்லப்படுகிறது. அவர்கள் குணப்படாதபடிக்கும்.... இப்படி சொல்லப்படுகிறது**" என்று மாற். 4 : 11, 12 சொல்லுகிறது. இயேசு எல்லாரையும் மனமாற்ற முயற்சித்து கொண்டிருக்காமல், மனுக்குலத்திலிருந்து அவருடைய உண்மையான சீஷர்களாகுபவர்களையே பிரித்தெடுக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறார். இந்த விரிவடைந்த சுவிசேஷ யுகத்தில் உலகத்தின் மனமாற்றத்தை தேவன் நோக்கமாக கொள்ளவில்லை. உலகத்தை நோக்கிய ஆண்டவரின் ஆயிரவருட மத்தியஸ்த வேலைக்காக நாம் அவருக்காக காத்திருக்கிறோம். எனவே இயேசு ஒவ்வொருவரையும் மனமாற்ற முயற்சிக்காமல், ஆனால் "உத்தம இஸ்ரயேலர்"களாயிருந்தவர்களையே அவர் உலகத்திலிருந்து பிரித்தெடுப்பதற்காக பிரசங்கித்தார். (அப். 15 : 14).

இப்படிப்பட்ட சில அற்புதமான இரகசியங்களை தேவன் நமக்கு (உத்தம இஸ்ரயேலர்களுக்கு) வெளிப்படுத்தியமைக்காக நாம் எவ்வளவு நன்றியறிதலுள்ளவர்களாய் இருக்க வேண்டும். நாம் வேதாகமத்தை படிப்பதற்கான ஒரு காரணம் என்னவெனில் நாம் அவற்றைக் கற்றுக்கெள்ள விரும்புகிறோம். அனைவரும் புரிந்து கொள்வதற்கான காரியங்கள் வேதாகமத்தில் உள்ளது. இந்த புத்தகம் உள்ளும் புறமும் எழுதப்பட்டு இருக்கிறது என வெளி. 5 அதிகாரம் கூறுகிறது. வெளிப்புறத்திலுள்ள காரியங்கள் வேதாகமத்தில் மேலோட்டமான காரியங்கள், அவைகள் அநேக மக்களால் புரிந்து கொள்ள இயலும் காரியங்கள். ஆனால் "உட்புறக்" காரியங்கள் எடுத்துக் கொண்டால் அவைகள் வேதாகமத்தின் ஆழமான காரியங்கள், நாம் அவற்றை அறிந்து கொள்வதற்கு முன்பு, கண்டிப்பாக அவருடைய சீஷர்களாயிருக்க வேண்டும். அவருடைய ஞானத்தை தேடினோமாகில் பாக்கியவான்களாயிருப்போம். (நீதி. 3 : 13-18). 1 கொரி. 2 : 14-ல் "**ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான்: அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்**" என்று நாம் சொல்லப்படுகிறோம்.

## "அவர் மாம்சத்தில் வெளிப்பட்டார்"

நாம் இப்போது 1 தீமோ. 3 : 16-ல் இயேசுவைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ள ஆறு விஷயங்களுக்கு வருவோம். அவைகள் "தேவ பக்திக்குரிய இரகசியமான" இயேசுவை யார் என்று விளக்குகின்றன. இந்த வசனத்திற்கு Diaglott மொழிப்பெயர்ப்பில் உபயோகப் படுத்தப்பட்டிருக்கும் வார்த்தைகளை நாம் உபயோகப்படுத்துவோம்.

"அவர் மாம்சத்திலே வெளிப்பட்டார்" என்பது முதல் பகுதியாய் இருக்கிறது. இவ்வண்ணமாகவே, ASV, Diaglott போன்ற வேதாகமங்கள் மற்றும் பிரதான சுவடிகளிலும் நாம் வாசிக்கிறோம். இயேசு தாம் மானிட ஜீவியாக வருவதற்கு முன்பு தான் லோகாஸாக கொண்டிருந்த மகிமையை விட்டு மாம்சத்தில் வெளிப்பட்டார். "**அந்த வார்த்தை (லோகாஸ்) மாம்சமாகி ..... நமக்குள்ளே வாசம் பண்ணினார், அவருடைய மகிமையைக் கண்டோம்.**" (யோவா. 1 : 14). இயேசுவை நோக்கிப் பார்த்தவர்கள் அனைவரும் சொல்லர்த்தமாக யேகோவாவையும் கண்டார்கள் என்று இதன் அர்த்தமா? நிச்சயமாக இல்லை (யோவா. 1 : 18; 5 : 37: 1 தீமோ. 1 : 17; 1 யோவா. 4 : 12)! ஆனால் இயேசு யேகோவாவை எடுத்துக்காட்டி வாழ்ந்ததால், அவர்கள் இயேசுவில் கண்டது என்னவென்றால், யேகோவாவைப் பற்றி சாத்தியமாக மனுஷன் புரிந்துகொள்ள இயலும் காரியங்களையே ஆகும்.

## இயேசு "ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார்"

அடுத்ததாக, "**ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார்**" என இயேசுவைப் பற்றி 1 தீமோ. 3 : 16 கூறுகின்றது. நீதிமானாகுதல் - Justify என்பதன் அர்த்தம் சரிப்படுத்துதல் (make right) என்பது ஆகும். இது தவறான அல்லது நீதிக்கு இசைவற்ற ஒன்றை அதனோடு இசைவாக கொண்டுவருதலைக் குறிக்கிறது. இயேசு எவ்வாறு நீதிமானாக்கப்படக்கூடும்?

இயேசு "**பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும்**" என்று எபி 7 : 26 சொல்லுகிறது. மேலும் அவர் "பாவம் அறியாதவர்" என்று 2 கொரி. 5 : 21-ல் நாம் வாசிக்கிறோம். அவர் ஏற்கனவே

நீதிமானாக அல்லது சரியானவராகவே இருந்தார், பின்பு ஏன் அவர் நீதிமானாக்கப்பட வேண்டும்? இயேசுவின் $3\,^1/_2$ வருட கால சோதனைகளில் முழுவதும் தேவன் அவரை பூரணராகவும் அவருடைய எந்த மனச்சார்புகளிலும் (ஆவி) மாசற்றவராகவும் கண்டார். எனவே அவரை நீதிமானாக பிரகடனம் செய்தார். இயேசு தம்மையே நீதிமானாக்கி கொண்டார் அல்லது சரிப்படுத்திக் கொண்டார் என்று அல்ல, மாறாக அவர் தம்மை நீதிமானாக நிரூபித்தார். ஆம், "**அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர், வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும், மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக் கொள்ள பாத்திரராயிருக்கிறார்**" இயேசு ஆவியிலும், மனச்சார்பிலும் நீதிமானாக்கப் - பட்டார்.

## இயேசு "தேவ தூதர்களால் காணப்பட்டார்"

வச. 16-ல் குறிப்பிடப்பட்டுள்ள மூன்றாவது விஷயம் இயேசு "**தேவ தூதர்களால் காணப்பட்டார்**" என்பதாகும். நமது வசனத்தில் தேவ தூதர்கள் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை *aggeloi*, உண்மையில் தூதர்களை அர்த்தப்படுத்துகிறது. இது மானிட தூதர்களையும், ஆவி ஜீவிகளாகிய தூதர்களையும் அல்லது இன்னும் நியாயப்பிரமாணம் போன்ற அசையா தூதர்களையும் (வெளி. 5 : 2) குறிக்கிறது. இயேசுவின் $3\,^1/_2$ வருட கால ஊழியத்தில் அவர் உண்மையிலேயே மானிட மற்றும் ஆவி தூதர்களால் காணப்பட்டும், நெருக்கமாக கவனிக்கப் பட்டும் இருந்தார். விழுந்து போன தூதர்கள் கூட இதில் அதிக ஆர்வம் கொண்டிருந்தனர். சுவிசேஷ யுகத்துக்கு முன்னதாக கொடுக்கப்பட்ட தெய்வீக வெளிப் படுத்தலை 1 பேது. 1 : 11, 12-ல் நாம் வாசிக்கிறோம். "**இவைகளை உற்றுப்பார்க்க தேவதூதரும் ஆசை-யாயிருக்கிறார்கள்**" என்று அவ்வசனம் கூறுகிறது.

1 பேது. 3 : 19, 20-ல் நாம் இவ்வாறாக வாசிக்கிறோம் "**அந்த ஆவியிலே** (இயேசுவின் பாடு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதலினால்) **அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்கு** (விழுந்து போன தூதர்களுக்கு) **பிரசங்கித்தார். அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம் பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது கீழ்ப்படியாமற்போனவைகள்**" இயேசு எவ்வாறு இந்த காவலிலுள்ள ஆவிகளிடத்தில் போய் பிரசங்கித்தார். பிலி. 2 : 7-ன்படி (ரோதர்ஹாம் மொழிப்பெயர்ப்பு) இயேசு "(அதிகாரத்தை) அபகரித்தலை (தம்) சிந்தையில் கொள்ளவில்லை." அவர் தாழ்மையாயிருந்து, தம்முடைய மானிட நிலையின் முந்தைய நிலையை வெறுமையாக்கி, மனுஷனாகி, அடிமையின் ரூபமெடுத்து, சிலுவையில் மரணபரியந்தம் கீழ்ப்படிதலுள்ளவராயிருந்தார். இதன் விளைவாக தேவன் உயிர்த்தெழுதலில் அவரை எல்லா நாமத்துக்கும் மேலாக உயர்த்தினார். ஆகவே இயேசு தன்னுடைய மாதிரியின் மூலம் தூதர்களுக்கு அற்புதமாகவும், பலன் அளிக்கத்தக்க விதத்திலும்

> இயேசுவைக் குறித்து வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆறு காரியங்கள்
>
> அவர் :
>
> மாம்சத்தில் வெளிப்பட்டார்
>
> ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார்,
>
> தேவ தூதர்களால் காணப்பட்டார்
>
> புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார்,
>
> உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார்,
>
> மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார்.

பிரசங்கித்தார். மேலும் மனிதர்களுக்கும் அவர்கள் அவருடைய நடத்தையை கற்றுக்கொண்டு ஏற்று இருக்கிறவாறு பிரசங்கித்தார். இயேசுவைப் போன்று தாழ்மையாயிருந்து தேவனுக்கு ஊக்கமாய் ஊழியம் செய்பவர்களுக்கு தேவன் வெகுமதியளிக்கிறவரா-யிருக்கிறார் என்பதை தேவ தூதர்கள் கண்டபோது, அது அவர்களுக்கு ஒரு பெரிய நோக்கத்தைக் கொண்ட பாடத்தைப் பிரசங்கித்தது.

## "புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார்"

வச. 16-ல் குறிப்பிடப்பட்டுள்ள நாலாவது விஷயம் இயேசு "**புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார்**" என்பதாகும். அவர் முதலாவது யூதர்களிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார். அவர் தம்முடைய சீஷர்கள் முதலில் "**காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டா**"ராகிய யூதர்களிடத்தில் மட்டுமே அனுப்பினார் (மத். 10 : 5, 6; 15 : 24) அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கு பின்பு முதலாவது எருசலேம் மற்றும் யூதேயா எங்கும் அவர்கள் அவருக்கு சாட்சிகளாயிருக்க வேண்டும் என்று அவர் கூறினார். எனவே இயேசு முதலாவது யூதர்களிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார் (ரோம. 1 : 16) பின்பு கொர்னேலியுவிலிருந்து ஆரம்பித்து (அப். 10), இயேசு புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார். யூதர்களுக்கும் புறஜாதிகளுக்கும் நடுவே "**பகையாக இருந்த நடுச்சுவரை**" பற்றி எபே. 2 : 14 குறிப்பிடுகிறது. ஆனால் கொர்னேலியுவிலிருந்து துவங்கியதிலிருந்து இந்த நடுச்சுவர் தகர்க்கப்பட்டது. அதன் பின்பு யூதர்களும், புறஜாதிகளும் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தினராக மாறக்கூடிய நிலை உண்டாயிற்று.

"**தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்து கொள்ளும்படி முதல் முதல் அவர்களுக்குக் கடாட்சித்தருளின விதத்தைச் சிமியோன் விவரித்துச் சொன்னாரே**" என்று அப். 15 : 14 கூறுகிறது. கலா. 3 : 28-ல் அப்போஸ்தலர் "**யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும், சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்-ணென்றுமில்லை, நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்**" என்று சொல்லுகிறார். கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கத்தினராவதற்கு தடையாயிருக்கும்

இப்படிப்பட்ட எல்லா தடைகளும் தகர்க்கப்பட்டன. வெளி. 5 : 9, 10 சொல்லுகிறபடி சரீர அங்கத்தினர்கள் "**சகல கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜனங்களிலும், ஜாதிகளிலுமிருந்து** (புறஜாதிகள்)" எடுக்கப்படுகிறார்கள். எனவே இயேசு புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டு இருந்தார் என அப்போஸ்தலரால் உண்மையில் கூற இயன்றது. அதுமுதல் அவர் பல புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டு இருக்கிறார். சுவிசேஷம் புறஜாதிகளுக்கு இல்லாமல் இருந்திருந்தால், தேவனுடைய திட்டத்தின் தெரிந்தெடுத்தலின் அம்சத்தை பொறுத்தவரை உனக்கும் எனக்கும் எந்த ஒரு நம்பிக்கையும் இருந்திருக்காது.

## "உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார்"

வச. 16-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்தாவது விஷயம் இயேசு "**உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார்**" என்பதாகும். "**தேவ பக்திக்குரிய இரகசியமான**" இயேசுவை பற்றிய உபதேசம் அநேகரை சென்றடைந்தது, யூதர்கள் மற்றும் புறஜாதிகள் மத்தியில் நல்ல உண்மையான இருதயங்களை கொண்டவர்களையும் சென்றடைந்தது. அவர்கள் அந்தச் செய்தியை கேட்டதோடு மாத்திரமல்லாமல் விசுவாசிக்கவும் செய்தார்கள். 12 அப்போஸ்தலர்களும், 70 சுவிசேஷகர்களும் விசுவாசித்தார்கள், அவர்களுடைய ஊழியத்தின் மூலமாக இன்னும் அநேகர் விசுவாசித்தார்கள். இயேசு தம்முடைய மரணத்திற்கு பின்பு 500 பேருக்கு அதிகமான விசுவாசிகளுக்கு ஒரே வேளையில் தரிசனமானார் (1 கொரி. 15 : 6). ஆனால் பெந்தேகோஸ்தே எனும் நாள் வந்தபோது "**அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்**" (அப். 2 : 41). எனவே அவர்கள் யூத யுக அறுப்பில் (29-69 கி.பி) சுவிசேஷ களஞ்சியத்தில் விசுவாசிகளைக் கூட்டிச் சேர்க்கும் ஒரு அற்புதமான அறுவடை வேலையை செய்தார்கள். அப்போஸ்தலர்களால் அவர்களிடத்தில் அவர்களுடைய சொந்த பாஷை அல்லது மொழியில் பேச இயன்றது. அந்த காலத்தில் இந்த தேவனுடைய ஊழியக்காரர்களுக்கு கொடுக்கப்பட்ட ஒரு அற்புதமான வரத்தை அவர்கள் பெற்றிருந்தார்கள், இதனால் ஒரு பாஷையை கற்றுக் கொள்ளாமலேயே அவர்களால் அந்த பாஷையை பேச இயன்றது. ஆதிச் சபையை நிறுவுவதற்கு இந்த வரத்தோடுகூட மற்ற வரங்களும் அவசியமாயிருந்தது. ஆனால் அப்போஸ்தலர்களும் மற்றும் அவர்கள் கரங்களை வைத்ததினால் பெற்றுக்கொண்டவர்கள் எவர்களோ அவர்களும் மறைந்த பின்பு இந்த வரங்கள் மற்றவர்களுக்கு அளிக்கப்படும் வகையில் தொடரவில்லை. இந்த விசேஷித்த வல்லமையானது பன்னிரெண்டு அப்போஸ்தலர்களால் மாத்திரமே அளிக்கப்பட கூடியதாயிருந்தது.

கொர்னேலியுவில் தொடங்கி அநேக புறஜாதிகள் கிறிஸ்தவ விசுவாசிகளாய் மாறினார்கள், விசேஷமாக அப்போஸ்தலர் பவுல் மற்றும் மற்றவர்களுடைய போதனையின் மூலம் அநேகர் கிறிஸ்தவ விசுவாசிகளாக மாறினார்கள். யூதர்கள் அப்போஸ்தலர்களுடைய போதனைகளை நிராகரித்தபோது, அவர்கள் பதிலாக தங்களுடைய பிரசங்கங்களை புறஜாதிகளிடத்தில் பேசினார்கள், அநேகர் விசுவாசித்தார்கள் (அப். 13 : 46-48; 28 : 25-28) யூதர்களுக்கு பதிலாக, யூதர்களில் சிறந்தவர்களாலும், புறஜாதிகளில் சிறந்தவர்களாலும் உருவாக்கப்படுகிற ஆவிக்குரிய பன்னிரெண்டு கோத்திரங்களில் இந்த புறஜாதியார் ஒட்டவைக்கப்பட்டார்கள். (வெளி. 7 : 4-8; மத். 19 : 28). யூதர்களும், புறஜாதிகளும் இந்த "**தேவ பக்திக்குரிய இரகசியமான**" இயேசுவை அப்போஸ்தலருடைய காலங்களில் விசுவாசித்தார்கள், அதுமுதல் அநேக ஜனங்கள் விசுவாசித்து வருகிறார்கள்.

## "மகிமையில் ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார்"

நாம் இப்போது 16 ஆம் வசனத்தின் ஆறாவது மற்றும் கடைசி விஷயத்துக்கு வருவோம். இயேசு "**மகிமையில் ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார்.**" இயேசு தம்முடைய உயிர்த்தெழுதலுக்கு பின்பு 40 நாட்கள் கழித்து பரலோகத்தில் தேவனோடு வாசஞ்செய்ய ஏறி போனதை இது குறிப்பிடுகிறது.

அப். 1 : 6-11-ல் அவர் பரலோகம் ஏறிய நேரத்தில் "**கூடி வந்திருந்தவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரயேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள். அதற்கு அவர்: பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல. பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். இவைகளை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில் உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்: அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது.**" "**அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ வெண்மையான வஸ்திரந் தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள் உங்களிடத்திலின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்**" என நாம் வாசிக்கிறோம்.

இயேசுவின் இரண்டாம் வருகையானது (1874 கி.பி) எல்லாராலும் உடனடியாக அறிந்து கொள்ளப்படும் என எண்ணும் சிலர் இருக்கின்றனர். ஆனால் இங்கே அது "**எப்படி.... வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ அப்படியே**" இருக்கும். அதாவது அமைதியாக, இரகசியமாக இருக்கும் என்று காண்பிக்கப்படுகிறது. (அப். 1 : 7). அதின் ஆரம்ப காலகட்டங்களைப் பொறுத்தவரை "**காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல.**" பொதுவான உலகம் இதைப் பற்றி அறிந்து கொள்ளாது.




*லூக். 24 : 50-53 வரையுள்ள வசனங்கள் இயேசுவைப் பற்றி இவ்வாறு கூறுகிறது.* **“பின்பு அவர் பெத்தானியா வரைக்கும் அவர்களை அழைத்துக் கொண்டுபோய், தம்முடைய கைகளை உயர்த்தி, அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களை ஆசீர்வதிக்கையில் அவர்களை விட்டுப் பிரிந்து, பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். அவர்கள் அவரை பணிந்து கொண்டு, மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பி வந்து, நாடோறும் தேவாலயத்தில் தேவனைப் புகழ்ந்து துதித்துக் கொண்டிருந்தார்கள்.”**

*இயேசுவின் பரமேறுதலின் காலமானது, அவர் அவர்களை பிரிந்து அவர்களோடு இல்லாமல் இருந்தபோதும்கூட பெரிய சந்தோஷத்தின் காலமாயிருந்தது, இந்த பெரிய சந்தோஷத்தை, ஒரு குறிப்பிட்ட அளவில் நாமும் பற்றி பிடிக்க வேண்டும்; ஏனெனில் நாம் அவர் போன காலத்தில் வாழாமல், அவருடைய வருகையை எல்லாருக்கும் வெளிப் படுத்தும் முன் அவருடைய ஜனங்களின் இருதயத்தின் வாசல்படியில் நின்று அவர் தட்டுகிற காலமாகிய, இந்த லவோதேக்யாவின் காலத்தில் அவருடைய இரண்டாம் வருகையின் காலத்தில் வாழ்கிறோம் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அவருக்காக நாம் நமது இருதயக் கதவை திறக்க அவர் விரும்புகிறார், அவர் உட்பிரவேசித்து, ஒரு பெரிய ஆவிக்குரிய விருந்தில் நம்மோடே போஜனம் பண்ணுவார், நாம் அவரோடே இருப்போம் (வெளி. 3 : 14-20). நாமும் அதே போன்ற சந்தோஷத்தை கொண்டிருக்க முடியும், ஆதி சீஷர்களைப் போன்று நாமும் அவரை புகழ்ந்து பணிந்து கொண்டிருக்க முடியும்.*

*இந்த “தேவ பக்திக்குரிய இரகசிய”மான நம்முடைய ஆண்டவர் இயேசு, எல்லாரும் ஏற்றுக் கொள்கிறபடி ஒரு தூணும் அஸ்திபாரமாய் “தேவ பக்தியின் பரம இரகசியமாக”(secret) இருக்கிறார். அவரே மாம்சத்தில் வெளிப்படுத்தப்பட்டு, ஆவியிலே நீதிமானாக்கப்பட்டு, தூதர்களால் காணப்பட்டு, புறஜாதிகள் மத்தியில் பறைசாற்றப்பட்டு, உலகத்தில் விசுவாசிக்கப்பட்டு, மகிமையில் ஏறெடுத்துக் கொள்ளப் பட்டார். அவர் உயிரோடு எழுப்பப்பட்டு பரலோகத் திற்கு ஏறிபோனார். அவர் பிதாவின் தன்மையின் (ஆள்தத்துவம்) “சொரூபமாயிருந்து சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய்” இருக்கிறார். (எபி. 1 : 2-4) நமக்காக* **“வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக் கிறவர்”** *(எபி. 7 : 25). விழுந்து போன தூதர்களுக்கு ஊழியம் செய்யவும், நித்திரையில் இருக்கும் பரிசுத்த வான்களை எழுப்பவும், அவருடைய மணவாட்டி மற்றும் மணவாட்டியின் தோழிகளை ஏற்றுக் கொள்ளவும், வாலிபரான பாத்திரவான்களை ஒழுங்குபடுத்தவும், இக்காலத்தில் பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளையக்காரர்களை அழைக்கவும், நம்முடைய ஆண்டவராகிய இயேசு கி.பி. 1874-ல் தம்முடைய இரண்டாம் வருகையில் திரும்பி வந்தார்.*

*அவர் நமக்கு எப்போதும் மகா மேன்மையுள்ள வராகவும், நம்முடைய ஊழியத்தின் மூலம் மற்றவர்களுக்கும் அவர் மகா மேன்மையுள்ளவராக மாறட்டும், காலம் செல்ல செல்ல நமக்கு அவர் இன்னும் மகாமேன்மையுள்ளவராய் மாறட்டும்.* ***

## நாசரேத் LHMM கன்வென்ஷன் (அக்டோபர் 7, 8, 9–2016)

**இந்த கன்வென்ஷனில் உற்சாகமாய் கலந்து கொண்டு தங்கள் பிரதிஷ்டையை புதுப்பித்துக் கொள்ளும்படியாக கர்த்தருக்குள் அன்பான சத்திய சகோதர, சகோதரிகள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**
**தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக. (சங். 117:24; 103:17,18; 133.)**

Visit us at : **www.biblestandardindia.com**

*For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact :*
**Bro. V. Vincent Jeyakumar**
**Laymen’s Home Missionary Movement**
#11/119-3, Near Water tank, South Street, Mukuperi - 628 616
(Near Nazareth), Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629

**FOR PRIVATE CIRCULATION ONLY**